நூல்—அஞ்சல்
BOOK-POST

திருவள்ளுவர் ஆண்டு 2039

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி :102 பகுதி :2 மார்ச்சு-08

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

செந்தமிழ்க் கல்லூரி - 51 ஆவது பட்டமளிப்பு விழா

மதுரை தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க் கல்லூரியின் 51ஆவது பட்டமளிப்பு விழா 5.3.2008 அன்று நடைபெற்றது. 162 மாணவ, மாணவியர் பட்டம் பெற்றனர். 29 பேர் எம்ஃபில்., பட்டமும், 36 பேர் எம்.ஏ., பட்டமும், 45 பேர் பி.ஏ., பட்டமும், 52பேர் பி.லிட்., பட்டமும் பெற்றனர். இவர்களுள் பி.லிட் படிப்பில் பி.தேன்மொழி, பி.அருண்பாரதி, எஸ்.மலைராஜ், பி.நிரஞ்சனாதேவி ஆகியோர் முறையே முதல், இரண்டு, மூன்று, நான்காம் நிலைகளில் (Rank) தேறியுள்ளனர். பி.ஏ., படிப்பில் என்.கே. தேவி முதல் நிலையும் (I-Rank) எம். சங்கரேஸ்வரி நான்காம் நிலையும் (IV Rank) பெற்றுள்ளனர். பி.ஏ. முதல்தாள் தமிழில் எம். சங்கரேஸ்வரி மூன்றாம் நிலை (III Rank) பெற்றுள்ளார். செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திரு. இரா. குருசாமி விழாவிற்குத் தலைமை தாங்கினார். மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலாளர் திரு. இரா. அழகுமலை முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் க. சின்னப்பா அனைவரையும் வரவேற்றார். மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் ஐ.சிங்காரம் வாழ்த்துரை வழங்கிப் பட்டமளித்துச் சிறப்பித்தார். மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரிக் கல்வி முதன்மையர் பேராசிரியர் டேவிட் அமிர்தராஜன் விழாச் சிறப்புரையாற்றினார். பேராசிரியை முனைவர். நிர்மலா நன்றி கூறினார். பட்டமளிப்பு விழாவில் செந்தமிழ்க் கல்லூரியின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் திரு. முத்தையா பசும்பொன், திரு. பரங்குன்றம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். மாணவ, மாணவியர் பட்டம் பெறுவதைக் கண்டு மகிழப் பெற்றோரும், உற்றோரும், சகோதர சகோதரியரும் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. விழா நிகழ்ச்சிகளை, பேராசிரியை முனைவர். தனலக்குமியும், பேராசிரியர் டி.கே. மோகன்ராமும் தொகுத்து வழங்கினர்.

செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 102
பகுதி : 3
மார்ச்சு 2008

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2038

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

பொருளடக்கம்

இதழ்மணம் — 86

நூல் திறனாய்வு — முனைவர் முத்துலெக்குமி — 88

சீவான்மா — மு. வேங்கடசாமி நாட்டார் — 90
(சென்ற இதழ் தொடர்ச்சி)

கோயில்களும் கல்வெட்டுகளும் — டாக்டர் வெ. வேதாசலம் — 93

செந்தமிழ்ச் செவ்விலக்கியங்கள் மொழியாக்கம் — பொ. பாண்டித்துரை — 113

செப்பரும் பெரும்புலமைச் செந்தமிழ் ஆசான் — முனைவர். பேராசிரியர் கு.வெ. பாலசுப்ரமணியன் — 118

இதழ்மணம்

தீஞ்சுவை நிறைந்த நம் செந்தமிழ் மொழியானது செம்மொழியாக உலகெலாம் ஒருமனதாகப் போற்றப்படுகின்ற இவ்வேளையில் மார்ச் மாத இதழானது தமிழ் மொழியின் தொன்மையையும் சிறப்பையும் மேன்மையையும் எடுத்துக்காட்டக் கூடிய இதழாக மலர்ந்துள்ளது.

இதழின் தொடக்கமே "**அறம் எனப்படுவது .....**" என்ற நூலின் திறனாய்வாக அமைந்துள்ளது. பழமை முதல் அறிவியல் உலகான இன்றுவரையிலான தமிழின் பரிணாமங்களை வெளிக்காட்டும் கட்டுரைகளின் செம்மையை இத்திறனாய்வு புலப்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, சென்ற இதழில் வெளிவந்த "**சீவான்மா**" என்னும் கட்டுரை இவ்விதழில் முற்றுப் பெற்றுள்ளது. உயிர், ஆன்மா ஆகிய இவ்விரண்டிற்கும் இடையிலான உறவை ஆன்மீக இலக்கியங்களைக் கொண்டு மு. வேங்கடசாமி நாட்டார் விரித்துரைத்துள்ளார்.

அடுத்ததாக டாக்டர் வெ. வேதாசலம் எழுதிய "**கோயிலும் கல்வெட்டுகளும்**" என்னும் கட்டுரை அமைந்துள்ளது. வரலாற்றியல் நோக்கில் கல்வெட்டுகள் உலகிற்கு உணர்த்தும் செய்திகளை இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது. கல்வெட்டுகள் மன்னரின் பெருமைகளைப் புலப்படுத்துகிறது என்ற எண்ணத்தை அடியோடு மாற்றி, கல்வெட்டுகள் அக்காலச் சமூக வாழ்வை எடுத்துக்காட்டும் உண்மையை ஆசிரியர் நிறுவியுள்ளார்.

பேரா. கா. செல்லப்பன் எழுதிய "**செந்தமிழ்ச் செவ்விலக்கியங்கள் மொழியாக்கம்**" என்ற கட்டுரை பாரதியின்,

'திறமையான புலமை எனில் அதை வெளிநாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும்' என்ற வாக்கு மெய்ப்பட்டதை எடுத்துக்காட்டியுள்ளது சிறப்பிற்குரியதாக அமைந்துள்ளது.

செந்தமிழுலகு என்றும் பெருமைப்படத்தக்க வகையில் தமிழ்வாழ்வு வாழ்ந்த இரா. இராகவய்யங்காரின் வரலாற்றைப் பேரா. கு.வெ. பாலசுப்பிரமணியன் "**செப்பரும் பெரும்புலமைச் செந்தமிழ் ஆசான்**" என்ற கட்டுரை வாயிலாக உலகிற்கு வழங்கியுள்ளார்.

இவையனைத்தும் தமிழின் சிறப்பை மட்டுமன்றி, நம் செந்தமிழ் இலக்கிய இதழின் பெருமையையும் இன்றைய தமிழுலகம் நினைவு கூர்வதற்குத் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை.

❄❄❄❄❄

2008 மார்ச்சு மாதம் புரவலர் கட்டணம் ரூ.1000/- வழங்கிய பெருமக்கள்

1) திரு எஸ். முகைதீன் பிச்சை

தமிழாசிரியர், மகுதுதைக்கா மேல்நிலைப்பள்ளி, கடயநல்லூர்

2) டாக்டர் திரு கு. கதிரேசன்

முதுமொத்தன்மொழி, இடையன்குடி (வழி) நெல்லை மாவட்டம்

3) அரசு ஆடவர் கலைக் கல்லூரி

கிருஷ்ணகிரி

செந்தமிழ் இதழுக்கு நல்கையாக ரூ. 10,000/- வழங்கிய இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்துக்கு (மைசூர்) நன்றி.

நூல் திறனாய்வு

முனைவர்.முத்துலெக்குமி, மதுரை.

நூலின் பெயர் : **அறம் எனப்படுவது...**

புத்தகம் படிக்கும் பழக்கத்தைச் சுவாசிப்புடன் நேசிப்புச் செய்வதற்குத் துணையாக இருப்பது நூல்திறனாய்வு என்ற பகுதி. முனைவர் அமுதன் எழுதிய "**அறம் எனப்படுவது ..**". என்ற நூல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை வெளியீடு. முதற்பதிப்பு 2006, விலை ரூ 65. ஆகும்.

"அறவியலும் பண்பாடும்" என்ற புதிய பாடம், பொள்ளாச்சி நல்லமுத்து மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி) யில் பயிற்றுவிக்கப்படுகிறது என்பது நல்லதோர் நிகழ்வாகும். அப்பாடத்திட்டத்தின் பொருட்டுக் கருவாகி உருவான இந்நூல் பதினொரு தலைப்புக்களில் கருத்துக்களைக் கொண்டு விளங்குகின்றது.

ஒவ்வொரு கட்டுரையும் முத்திரை பதித்த வித்தகத் தன்மையில் அமைந்துள்ளது. "வேண்டும் அறிவியல் கல்வி" என்பது அறிவியல் கல்வியின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துகிறது. "இன்றைய மனிதன் அறிவியலில் பூதாகரமாக (Nuclear giant) விசுவரூபம் எடுத்துள்ளான். ஆனால் அறவியலில் கலிவரின் சித்திரக் குள்ளனாக (Ethical Dwarf) குறுகிப் போய் நிற்கிறான் என்ற வரிகள் அறவியலின் தேவையை உணர்த்துவன. "மாபாரதம்" பாரதத்தின் மாபெரும் இதிகாசமான மாபாரதத்தின் பெருமையினை எடுத்து விளக்கித் தீமையின் அழிவினைக் கண்ணபெருமான் மூலம் அறிவுறுத்துகிறது. "கடவுட் கோட்பாடு" என்ற கட்டுரை கடவுளின் நுண்ணிய தத்துவத்தை வேதாந்த சித்தாந்த நெறிமுறையில் விரிவாகக் கூறுவதோடு அண்ணல் காந்தியடிகளின் கடவுட் கோட்பாட்டின் மூலமும் அத்தத்துவத்தை விளக்குகிறது.

'ஆதி சங்கரர்', 'வள்ளலார்', 'காந்தியடிகள்' என்ற தலைப்புக்களில் எழுதியுள்ள கட்டுரைகளில் இம்மகான்களின் வாழ்வியல் செல்நெறி செயல் திறனும் வாழ்ந்து காட்டி உலகுக்கு உணர்த்திய உண்மைகளும் உணர்த்தப்படுகின்றன. இம் மூவரும் இறைத் தத்துவங்களை மக்களுக்கு உணர்த்தியுள்ள பாங்கு குறிப்பிடத்தக்கது.

மனித உடலோடு ஒப்பிட்டு 'திருக்கோயில்' வடிவாக்கத்தை முனைவர் அமுதன் 'திருக்கோயில் தத்துவங்கள்' என்ற கட்டுரையில் எடுத்தியம்பியுள்ளார்.

வாழ்க்கையில் ஒவ்வொரு மானுடமும் தன்னளவில் தலைநிமிர்ந்து நிற்பதற்குத் தொழில் மட்டுமல்ல, தொழில் சார்ந்த கலைகளும் தேவை என்பதைக் 'கலைகளில் ஒன்றைக் கற்றுக் கொள்' என்ற கட்டுரை விளக்குகிறது.

சமயங்கள் பலவாயினும் அனைத்துச் சமயங்களும் ஒன்றித்து நிற்குமிடம் இறைவடிவம் – இறையருள் என்பதேயாகும். சேவையினைத் தெய்வமாகக் கொள்வதோடு சமய நல்லிணக்கத்தோடும், சமய ஒருமைப்பாட்டுடன் ஒருவரோடு ஒருவர் நேயத்தோடு இருப்பதே சமயம் என்று வலியுறுத்தும் ஆசிரியர் பாரதி கண்ட சமயத்தைத் தனித்து விளக்கியுள்ளார்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ அச்சமின்மை மட்டுமல்ல போதைப் பொருள்கள் பயன்படுத்தல் கூடாது என்பன போன்ற நடைமுறை வாழ்வியலுக்குத் தேவையான, குறிப்பாக இளைய தலைமுறைக்குத் தேவையான கட்டுரைகளும் இந்நூலின் கண் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு கட்டுரையின் தொடக்கத்திலும் மேற்கோள் (Quotations) கள் இடம் பெற்றுள்ளன. எளிய இனிய நடையில் இந்நூல் அமைந்துள்ளது பாராட்டத்தக்கது. அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய மிகச் சிறந்த பாடத்திட்ட நூலாகும்.

சீவான்மா

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மு. வேங்கடசாமி நாட்டார்

இனி, மேற்கூறிய காரணாவத்தை மூன்றன்கண்ணும் தனித்தனி சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னுங் காரியாவஸ்தைகள் ஐவைந்துள. சாக்கிரமாவது; ஆன்மா முப்பத்தைந்து கருவிகளோடு லலாடஸ்தானத்தில் நின்றவவசரம். சொப்பனமாவது; இருபத்தைந்து கருவிகளோடு கண்டத்தில் நின்ற வவசரம். சுழுத்தியாவது: மூன்று கருவிகளோடு இருதயத்துநின்ற வவசரம். துரியமாவது: ஆன்மா புருடனோடு மூலாதாரத்தில் நின்ற வவசரம். இவை ஒவ்வொன்றின் கண்ணும் ஐவைந்தவத்தைகளுள. மேற்கூறிய சாக்கிரம் முதலியவைந்தும் கீழ்நோக்கிச் சென்றொடுங்கு முறையும், மேனோக்கித் தோன்றுமுறையும் பற்றி யிருவகைப்படும். அவற்றுள் ஒடுங்குமுறையது பிறவிக்கு வித்தாம். தோன்றுமுறையது பிறவியறுத்தற்குக் காரணமாம். இவற்றின் விவரங்களையெல்லாம் நூல்களிற் கண்டுகொள்க.

இனி, ஆன்மாக்கள் பொருந்துஞ் சரீரங்கள்: காரணசரீரம், கலாதிகளாகிய கஞ்சுகசரீரம், குணசரீரம், சூக்கும சரீரம், தூலசரீரம் என ஐந்து. இவை முறையே ஆனந்தமயகோசம், விஞ்ஞான மயகோசம், மனோமயகோசம், பிராணமயகோசம், அன்னமயகோசம் என்னும் பெயர்களைப் பெறுவனவாம். இவை காரணக்குறியவாதலும் பிறவு முய்த்துணர்க.

இனிச், சீவான்மாக்கட்குத் தநுகரணம் முதலியவை உண்டாவதெங்ஙனமெனில்: முற்பிறப்பிற்செய்த கன்மங்களுக்கீடாக முதல்வனாலளிக்கப் படுமென்க. கன்மமும் சரீரத்தை யின்றியமையாமையால் தம்முண் முந்தியதியாதெனில்: அவை வித்தினிடத்து மரமும், மரத்தினிடத்து வித்தும்போலத் தம்முட் காரணகாரியமாய்ப் பிரவாகாநாதியாய் வருதலின் அவற்றிற்குத் தம்முண் முற்பிற்பாடு கூறமுடியாது.

இனி, இப்பிறப்பிற்கு முற்செய்த கன்மங் காரணமென்று கூறுதல் பொருந்தாது. காலதேசங்களி னியற்கையாற் சரீரத்திற்கு வடிவு, நிறம் முதலியவை யுண்டாகின்றன. பெற்றோர்களுடைய அறிவிற்குஞ் சரீரவமைப்புக்குந் தக்கபடி பிள்ளைகள் புத்திசாலிகளாயும், மூடர்களாயும், சர்வாங்கசுந்தரர்களாயும், அங்கஹீனர்களாயும் பிறக்கின்றார்கள். அவரவர்களுடைய முயற்சிக்கும் சோம்பலுக்கு மேற்பச் செல்வ வறுமைகளையடைகின்றார்கள். இதற்காக மற்றொரு பிறப்புக் கொள்வதென்னை? எனில்: தேசவியற்கை முதலியன வடிவு முதலியவற்றிற் கோரோவழிக் காரணமாயினும் எல்லாவற்றிற்கும் அவையே காரணமென்றல் பொருந்தாது. யாதோரங்க முங் குறைவில்லாத சுந்தரர்களுக்கு அங்கஹீனரான பிள்ளைகளும், அங்கஹீனர்கட்குச் சௌந்தர்யமுள்ள பிள்ளைகளும், மூடர்களுக்கு அறிவுள்ள பிள்ளைகளும், அறிவுடையோர்க்கு மூடப்பிள்ளைகளும், நல்லவுணவுண்பவர்களுக்குக் கெட்ட பிள்ளைகளும், தீயவுணவுண்பவர்க்கு நல்ல பிள்ளைகளும், ஒரே தாய் வயிற்றிற் பலவிதமான பிள்ளைகளும் பிறக்கக் காண்டலானும், முயற்சியுள்ளவன் வறுமையையும், சோம்பியிருப்பவன் செல்வத்தையும் அநுபவிப்பது முண்டாகலானும், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஆற்றல் பிறர் கற்பிக்க வேண்டாது, இளமையிற்றானோ யமைந்துகிடத்தலானும் இவை யெல்லாவற்றிற்குங் காரணமாய்க் கன்மமுண்டெனக் கொள்வதே பொருத்தமாம். கன்மமானது சடமாய்ச் செய்தபொழுதே யழிவதாகலாற் பின்னின்று தானே பயன்றருமென்பதொவ்வாது, உயிர், கருவிகளையின்றி யறியமாட்டாத சிற்றறிவுடையதாகலின் தானே கன்மத்தின் பயனையறிந்தடையு மென்றலு மொவ்வாது. ஆதலாற், சுதந்திர வறிவுடையனாகிய முதல்வனே உயிர்கள் மனவாக்குக் காயங்களாற் செய்கிற இதாகிதங்களையெல்லா

மேற்றுக் கொண்டு அநுக்கிரக நிக்கிரகங்களைச் செய்து சுகதுக்கங்களையளிப்போன்.

பெற்றோர்கள், தஞ்சொற்படி நடவாதபிள்ளைகளை ஒறுக்கியடித்துத் தண்டித்தல் கருணையானாற்போலவே முதல்வன் செய்யுந் தண்டமும் உயிர்கள் வீடுபேறெய்தற்பொருட்டு வைத்த கருணையானேயாம். மறைகள் ஈசனுடைய சொல்லாகும். நிரயம் அச் சொல்வழி நடவாதாரை வைக்குஞ் சிறைக்களமாகும். உம்பருலகங்கள் சொல்வழி நடப்போருக்குச் செல்வத்தோடுறைய வைக்கும். பதிகளாகும் உயிர்கள் தூலவுடம்பு கழிந்தவழிச் சூக்கும வுடம்பினின்றும் வினைப் பயன்களையநுபவித்தற் குரிய வெவ்வேறுடம்புகளுள வாதலால் அவ்வுடம்போடு இறைவனாணையாற் சென்று துறக்க நிரயத்தின்பத் துன்பங்களை நுகர்ந்து பின்பு அவ் வினைச் சேட மநுபவித்தற் பொருட்டுச் சூக்குமவுடம்போடு நிலத்திற்சென்று கருப்பாசயத்தைத் தலைப்படும். உயிர்கள் பூதனா சரீரம் போனபின்பு வினைகளின் வன்மை மென்மைகட்கேற்ப மற்றுமோர் பூதனாசரீரத்தையே எடுத்தலுமுண்டு. யாதனாசரீரம் போனபின் மற்றுமோர் யாதனா சரீரத்தையே யெடுத்தலுமுண்டு. இம்மையிலும் வண்டு முதலியவை அச்சுமாறுதலால் உயிர் அச்சு மாறிப்பிறக்கு மென்பதி லையமில்லை. இதற்குப் பிரமாணம்:

"அலியை கல்ல தானா னரிபல பிறவி யானான்
பகலவன் குலத்திற் றோன்றிப் பாரெலா முழுது மாண்டு
நிகரிலா வரசனாகுஞ் சிலந்திநீ டுலகம் போற்றச்
சுமதி லலிதா னன்றோ மாவலி யாய்த்துத் தானே."

என்பது (*சிவஞானசித்தியார்*)

மற்றும் இதுபற்றி யெழுதவேண்டுவன வெல்லா மெழுதின் மிக விரியுமாதலால் வியாசத்தை யிம்மட்டினிறுத்துதும்.

கோயிலும் கல்வெட்டுகளும்

(கி.பி.800 - 1400)

டாக்டர் வெ. வேதாசலம்
கல்வெட்டாய்வாளர்
தொல்லியல் துறை
மதுரை.

இடைக்காலத் தமிழக வரலாற்றைக் கல்வெட்டுச் சான்றுகள் இல்லாமல் எழுத இயலாது. பல்லவர், சோழர், பாண்டியர், விசயநகர வேந்தர், நாயக்க மன்னர் காலங்களின் வரலாற்றை அறியத் துணைநிற்கும் அரிய சான்றுகளாகக் கல்வெட்டுகள் உள்ளன. பண்டைய அரசியல், பொருளியல், சமயம், சமுதாயம், பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றிற்குரிய தரவுகளின் கருவூலமாகக் கல்வெட்டுகள் விளங்குகின்றன. இந்தியாவில் இதுவரை 75000 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 60000 கல்வெட்டுகள் விந்தியமலைக்குத் தெற்கே உள்ளன. அவற்றில் 25000 கல்வெட்டுகள் தமிழ்நாட்டிலும் அதனைச் சார்ந்த பகுதிகளிலும் உள்ளன. ஆவணங்களைக் கல்லில் அதிக அளவில் பொறித்து வைக்கும் வழக்கமும் அவற்றிற்கு நிலைத்த தன்மையைத் தரும் பண்பும் தமிழ்நாட்டில் இருந்துள்ளன.

கி.பி. 850 க்கும் 1300க்கும் இடைப்பட்ட சோழர், பாண்டியர் காலங்களிலேயே தமிழ்நாட்டில் கல்வெட்டுகள் அதிக அளவில் பொறிக்கப்பட்டுள்ளன. இக்காலத்தினைச் சார்ந்த 16500 கல்வெட்டுகள் இதுவரை படியெடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் காணப்படும் கல்வெட்டுகளில் தொண்ணூற்றைந்து விழுக்காடு கோயில்களிலேயே உள்ளன. சமூக, அரசியல் மாற்றங்களுக்கு ஏற்பக் கல்வெட்டுகளின் எண்ணிக்கையும் காலவாரியாக மாறுபடுகிறது. தமிழ்நாட்டில் பல்லவர் காலத்தில் தோன்றிய பக்தியியக்கத்தின் விளைவாய்ச் சமயம் சார்ந்த வாழ்வாய்ச் சமூகம் மாறியது. அதனைத் தொடர்ந்து ஏராளமான கற்கோயில்கள் பல்லவர்,

சோழர், பாண்டியர் காலங்களில் தோன்றின. கோயில் சமூகத்தின் கருப்பொருளாக ஊரின் மையமாக மாறியது. அந்நிலையில் கோயில்களுக்குப் போட்டி போட்டுக்கொண்டு ஆதரவளித்தவர்கள், தாம் அளித்த கொடை ஆவணங்களை என்றும் அழியாதவாறு கோயில்களில் கல்வெட்டுகளாகப் பொறித்து வைத்தனர்.

இடைக்காலத்தில் தமிழ்நாட்டுக்கோயில் ஏராளமான நிலங்களுக்கு உரிமைபடைத்த நிலவுடைமை நிறுவனமாக இருந்தது. பலருக்குக் கடனளிக்கும் பொருட்பலம் படைத்த வங்கியாக விளங்கியது. ஏராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பிற்கு இடமளித்த சமூக நிறுவனமாகத் திகழ்ந்தது. உயர் கல்வியும் ஆரம்பக் கல்வியும் அளிக்கும் கல்விக்கூடமாக அமைந்தது. பலதரப்பட்ட கலைகளை வளர்க்கும் கலைக் கூடமாகவும், கலைப் பொருள்களின் கருவூலமாகவும் அமைந்தது.

ஆதரவற்றவர்களுக்கு ஆதரவளிக்கும் அஞ்சினார் புகலிடமாக விளங்கியது. மருந்துகள் அளித்து, நோய்வாய்ப்பட்டோரைக் காக்கும் மருத்துவச் சாலையாகவும் நாடிவந்தோர்க்கு உணவளிக்கும் அறச்சாலையாகவும் அமைந்தது. அரசும் ஊரவைகளும் கோயில் கொடைகள் மீது கவனம் செலுத்தின. கோயில் வழிபாட்டின் மூலம் இவை இணைந்தன என்பதை இக்கல்வெட்டுகள் காட்டுகின்றன.

கோயில்களின் தோற்றம், வளர்ச்சி, அவற்றின் அமைப்பு, நிர்வாகம் ஆகியவற்றைக் கல்வெட்டுகள் மூலம் நன்கு அறியமுடிகிறது. கோவில்களின் வழிபாட்டுமுறைகளையும் அக்கால மக்களின் சடங்குகளையும் சமூகப்பழக்க வழக்கங்களையும் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. கோவில்கள் பலதரப்பட்ட சமயங்களில் மையமாக விளங்கின. இதனால் அவற்றையொட்டிப் பல சமயங்களின் மடங்கள் தோன்றின என்பதையும் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

அரசு-கோயில்-ஊர்

அரசு நிர்வாகம், கோயில்கள் மூலமாக, ஊரவைகள், சமூகம் ஆகியவற்றோடு உறவுகொண்டு நாட்டின் மீது தனது ஆளுமையை நிலைப்படுத்திக் கொண்டுள்ளது. அரசன் நாட்டின் பல பகுதிகளில் பயணம் செய்தபோது கோயில் மண்டபங்களிலும் கோயில் திருமுற்றங்களிலும் தங்கி மக்களைச் சந்தித்தான்.[1] மக்களின் குறைகளைக் கேட்டுக் கோயில் நிர்வாகத்தினையும் கண்காணித்தான். அரசன் நாட்டில் இருந்த நிலங்களை அளந்து வரி விதித்தான். அவற்றை அளவிடும் அளவுகோல்களின் வரைபடங்களையும் பெயர்களையும் கோயில் சுவர்களில் கல்வெட்டாகப் பொறித்து வைத்தான். இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஊரவையினர் நிலங்களை அளந்து வரிவாங்கினர். சோழவந்தானுக்கு அருகிலுள்ள தென்கரைச் சிவன் கோயிலின் தென்புறச் சுவரில் மனைக்கோல், பாடகக்கோல், மலைமேல்மலைக்குடிக் கோல் என்று பல கோல்கள் காணப்படுகின்றன.[2] இவை முறையே வீடு, நிலம், மேடுபள்ளமான இடங்களை அளக்கப்பயன்பட்டன. மன்னன் பெயரில் அமைந்த அளவுகோல்களும் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் வரகுணபாண்டியன் (கி.பி.862–880), திருச்செந்தூர்க் கோயில் வழிபாட்டுச் செலவிற்காக 1400 பொற்காசுகளைத் தானமாகத் தந்தான். அவற்றைப் பலவூர்களைச் சேர்ந்த சிறுநாட்டுத் தலைவர்களான அளற்றுநாட்டுக்கோன், இளஞ்சோனாட்டு இருப்பைக்குடிகிழவன், சாத்தம் பெருமான் ஆகியோர் மூலமாகக் கோயிலுக்குக் கொடுத்தான். திருச்செந்தூரைச் சூழ்ந்த பலவூர்களில் இருந்த ஊரவையார்க்கு அக்காசுகளைப் பங்கிட்டு அளித்து ஒவ்வொருவரும் குறிப்பிட்ட வழிபாட்டுப் பணியைச் செய்யுமாறு பணித்தான்.

ஒவ்வொரு ஊரவையினரும் தங்களிடம் அளிக்கப்பட்ட காசுகளிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு கோயில் வழிபாட்டிற்காகும் பொருட்களைக் கொண்டுவந்து தந்தனர். அரசு, நாடு, ஊர் என்ற மூன்றிற்கும் இடையேயுள்ள உறவைத்

திருச்செந்தூர்க் கல்வெட்டு வெளிப்படுத்துகிறது.[3] சோழநாட்டில் அரசுக்கு ஆதரவளித்த பிரமதாயம், நகரம், வேளாண் சமூக ஊர் ஆகியவற்றின் ஊரவையினராக விளங்கிய நிலவுடைமையாளர்கள் கி.பி.13ஆம் நூற்றாண்டில் திருக்கடையூர்ப் பகுதியில் ஏற்பட்ட கலவரம் காரணமாகத் தங்கள் ஊர்களைவிட்டு வெளியேறினர். காலப்போக்கில் பாண்டிய அரசின் தலையீட்டால் அவர்களது ஊர்களில் குடியேற்றப்பட்டனர். இதற்கு நன்றிக்கடனாக அவர்கள் அரசனின் கல்யாணத்திருமேனி நன்றாக இருப்பதற்காக நூற்றுஎட்டுத் திருநந்தாவிளக்குகள் திருக்கடையூர்க் கோயிலில் எரித்துள்ளனர்.[4]

சமயம் சார்ந்த மக்களின் மனத்தில் இடம்பிடிக்கும் முறையில் பல்லவர், சோழர், பாண்டியர் போன்ற பெருமன்னர்கள் ஏராளமான கோயில்களைத் தமிழ்நாட்டில் எடுப்பித்துள்ளனர். பல்லவ மன்னன் இராசசிம்மனால் எடுப்பிக்கப்பட்ட மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலும், காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலும் முதல் இராசராசனால் வானுயர எடுப்பிக்கப்பட்ட தஞ்சைப் பெருவுடையார் கோயிலும், முதல் இராசேந்திர சோழனால் எடுப்பிக்கப்பட்ட கங்கைகொண்ட சோழீசுவரர் கோயிலும் அக்காலச் சமயஎழுச்சியைக் காட்டும் கலைக்கூடமாக இன்றும் சிறப்புடன் விளங்கிவருகின்றன. தமிழ்நாட்டுப் பேரரசர்கள் தங்கள் ஆளுமையை அப்பெருங்கோயில்கள் மூலம் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள். அக்கோயில்களில் தனிக்கவனத்துடன் அவர்களால் செய்து வைக்கப்பட்ட சிற்பங்கள் பேரரசுத்தன்மையை உணர்த்துகின்றன. முதல் இராசராசனின் தஞ்சைக் கோயில் அவன் வெற்றியில் குவித்த செல்வங்களைக் காத்து நிற்கும் ஆன்மீகக் கருவூலமாக விளங்கியது என்பதைத் தஞ்சைக்கோயில் கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன. சோழர்கள் தங்கள் வெற்றியின் போது கண்டுகளிக்கப் பலநாட்டுத் தெய்வவுருவங்களை எடுத்துவந்து தமிழ்நாட்டுக் கோயில்களில் வைத்து வழிபட்டனர். தஞ்சைக் கலைக்கூடத்திலுள்ள சாளுக்கியரின் துவாரபாலர் சிற்பத்தின் அடியில் உடையார் ஸ்ரீ விஜயராஜேந்திர சோழதேவர் கல்யாணபுரம் எறிந்து கொண்டு வந்த துவாரபாலர் என்ற கல்வெட்டு காணப்படுகிறது.

ஊரவையினர் கோயில் காரியங்களில் ஈடுபட்டுக் கோயில் தொடர்பான ஆணைகளை நிறைவேற்றி வைத்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. வளமிக்க ஊர்களில் இருந்த கோயில்களின் உடைமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பினை மூன்றுகைமாசேனை போன்ற படைவீரர்கள் ஏற்றுக் காத்து நின்றனர்.[5] கோயில்களைத் திருப்பணிசெய்தபோது அவற்றிலுள்ள பழைய ஆவணங்கள் படியெடுக்கப்பட்டன. திருப்பணி முடிந்ததும் மீண்டும் அவற்றில் பொறிக்கப்பட்டன.[6] மானாமதுரை வட்டத்திலுள்ள இடைக்காட்டூர்ச் சிவன்கோயில் புதுபிக்கப்பட்டபோது பாண்டியனின் ஆணைப்படி அக்கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு மீண்டும் கோயில் விமானத்தில் பொறிக்கப்பட்டன. கண்டராதித்த சோழனின் மனைவியர் செம்பியன்மாதேவியார் தாம் திருக்கற்றளியாக மாற்றிய கோயில்களில் முன்பிருந்த கல்வெட்டுகளைப் படியெடுத்துத் திருப்பணி முடிந்ததும் மீண்டும் அக்கோயிலில் வெட்டுவித்துள்ளார்.[7]

கோயில்கள் உருவாக்கம்

கோயில்களைப் புதியதாக முழுமையாகக் கட்டியது குறித்துக் கல்வெட்டுகள் பேசுகின்றன. பழங்காலத்திலிருந்து தொன்றுதொட்டு இருந்துவரும் கோயில்பகுதிகளைக் காலந்தோறும் அவ்வப்போது தனித்தனியாகப் பலர் எடுத்தமை பற்றியும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவை கோயிலின் காலத்தை அறியத் துணைபுரிகின்றன. மதுரைக்கு அருகிலுள்ள ஆனைமலைக் குடவரைக் கோயிலை கி.பி.770இல் பராந்தக நெடுஞ்சடையனின் முதன்மந்திரிகள் மாறன் காரி, மாறன் எயினன் என்பவர்கள் தோற்றுவித்தனர்.[8] மதுரைக்கு அருகிலுள்ள கீழ்மாத்தூர்ச் சிவன் கோயிலை வீரபாண்டியன் காலத்தில் அவனது அதிகாரி தமிழவேள் என்பவன் ஸ்ரீ கண்டேஸ்வரம் என்ற பெயரில் புதியதாகத் தோற்றுவித்துள்ளான்.[9] திருமயம் வட்டத்துச் சுந்தரம் சிவன்கோயிலின் பல பகுதிகளைப் பலர் தனித்தனியாக உருவாக்கியுள்ளனர். பொன்னமராவதிச் சோழீசுவரர்கோயிலின்

விமானத்தை எடுப்பித்து அங்குள்ள கருவறையில் சிவலிங்கத்தை நிசதராசன் பிரதிட்டை செய்துள்ளான். திருத்தங்கல் பெருமாள் கோவிலையும் சிவன் கோவிலையும் முதல்மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அதிட்டானம் முதல் கலசம் முடிய கற்றளியாக அவனது அதிகாரி தடங்கண்ணிச் சிற்றூருடையான் சோழன் உய்யநின்றாடுவானான குருகுலத்தரையன் மாற்றியிருக்கின்றான்.[10]

விமானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்றுமாளிகை, (திருச்சுற்றுநடைமாளிகை, சுற்றாலை) திருமடைப்பள்ளி, பரிவாரக் கோயில்கள், அம்மன், நாச்சியார் கோயில்கள், மண்டபங்கள், கோபுரங்கள் எடுத்தமை பற்றியும் கல்வெட்டுகள் கூறுகின்றன.[11] கோயிலின் உறுப்புகளான திருவாசல், திருநிலைக்கால், படி, படியிடை, பலிபீடம், தூண், சித்திரகண்டக்கால், திருப்பூப்பலகை, கோமுகம், சாளரம் ஆகியவற்றை எடுத்தமை பற்றியும் கல்வெட்டுகள் பேசுகின்றன.[12] கோயிலில் உள்ள செப்புத் திருமேனிகளையும், கற்றிருமேனிகளையும் எழுந்தருளிவித்தவர்களின் பெயர்களும் கல்வெட்டுகளில் வருகின்றன.[13] அருப்புக்கோட்டைச் சிவன்கோயில் விமானத்தின் தேவகோட்டங்களில் உள்ள இலிங்கபுராணதேவர், துர்க்கையர் சிற்பங்களைச் செய்வித்தவரின் பெயர்கள் அவற்றின் அடியில் பொறிக்கப்பட்டுள்ளன.[14] சிவகங்கை மாவட்டம் இடைக்காட்டூர்ச் சிவன்கோயில் தேவகோட்டத்துத் தட்சிணாமூர்த்தி உருவத்தினை அழகியபாண்டிய தெட்சிணாமூர்த்தி என்ற பெயரில் மயிலேறுவான் அடியார்க்கு நல்லான் ஆன அரும்புகழளித்த பாண்டிய தேவர் செய்வித்துள்ளார்.[15] முதல் இராசராசனின் தஞ்சைக்கோயிலில் ஏராளமான செப்புத்திருமேனிகள் செய்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று மெய்ப்பொருள்நாயனார் திருமேனியாகும். கல்வெட்டில் இத்திருமேனி, தத்தா நமரேகாண் எனும் மிலாடுடையார் செப்புத் திருமேனி என்று குறிப்பிடப்படுகிறது.[16]

கோயில் நிர்வாகம்

கோயிலை நிர்வாகம் செய்தவர்கள், கண்காணித்தவர்கள், பலவேலைகள் செய்த கோயில் பணியாளர்கள் பற்றி விரிவாகக் கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது. தஞ்சைப் பெருங்கோயில் கல்வெட்டுகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளன. கோயில் நிர்வாகம் செய்தவர்களைத் தேவகன்மகள், பதிபாதமூலப்பட்டுடையார், பதிபாதமூலப்பட்டுடை பஞ்சாசாரியதேவகன்மிகள், ஸ்ரீமாஹேசுவரர், ஸ்ரீமாஹேஸ்வரக்கண்காணியார், ஸ்ரீருத்திரமகேசுவரர், ஸ்ரீபன்மாஹேசுவரர், ஸ்ரீவைஷ்ணவர், அகநாழிகையார், உண்ணாழிகையார், மூலப்பருடையார், மூலப்பருடைசபையார், மூலப்பருடைப்பெருமக்கள் என்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.[17] இவர்கள் ஸ்ரீகாரியம்செய்வார், ஸ்ரீகாரியம் ஆராய்வார், ஸ்ரீகாரியம் திருத்துகின்றவர், தன்மிகள், தானத்தார், குளங்களிலார், ஸ்ரீகரணத்தார் என்றும் குறிப்பிடப்படுகின்றனர்.[18] பலபெருமக்கள் சேர்ந்து சிறுசிறு குழுக்களாகவும் கோயில் காரியங்களில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் கிருஷ்ணகணப் பெருமக்கள், வீரகணத்தார், சாத்தகணத்தார், அமிர்தகணத்தார், புண்ணிய கணத்துப்பெருமக்கள், கார்த்திகைக் கணப் பெருமக்கள், திருநட்டகணப்பெருமக்கள் என்று அழைக்கப்பட்டனர்.[19]

கோயிலின் தேவைக்கேற்ப ஏராளமான பணியாளர்கள் இருந்துள்ளனர். இவர்களின் பதவி, செய்யும் வேலை, தகுதி, சம்பளம் குறித்து விரிவாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.[20] கோயில்களில் கோயில் கணக்கு, ஸ்ரீபண்டாரம், ஆவணம், ஸ்ரீகாரியம்செய்வான், ஸ்ரீகாரியம் ஆராய்வான், சிவபிராமணர், பட்டர், பரிசாரகர், அடுவார், தேவரடியார், நட்டுவர், நீர்கொணர்வார், பூவிடுவார், தழையிடுவார், பூத்தொடுப்பார், இடையர் (மன்றாடி, வெட்டிக்குடி) உவச்சர், ஈரங்கொல்லி, தச்சாசாரியர், கொல்லர், கைக்கோலர், வேட்டுக்கோவன் (குயவன்) மெழுவாள், விறகிடுவார், அடுவான், ஸ்ரீபாதம்தாங்கி, மெய்க்காவல், ஜோதிடர், திருப்பதியம்பாடுவார் என்று பலர் பணிபுரிந்துள்ளனர். தஞ்சைக் கோயிலில் திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் பலர் (48 பேர்கள்)

இருந்தனர். அவர்களோடு உடுக்கைவாசிப்பான் (ஒருவர்) கொட்டி மத்தளக்காரரும் (ஒருவர்) அமர்த்தப்பட்டனர். தமிழ் நாட்டிலேயே அதிக அளவில் தஞ்சைக் கோயிலில் தளிச்சேரிபெண்டுகள் 400 பேர்கள் இருந்தனர். அவர்களுடன் நட்டுவம் (12 பேர்), வானம்பாடி (4 பேர்), வங்கியக்காரர் (குழல்) (3 பேர்), பாடவியம் (5 பேர்), உடுக்கை வாசிப்பான் (2 பேர்), வீணைவாசிப்பான் (2 பேர்), ஆரியம்பாடுவார் (3 பேர்), தமிழ் பாடுவார் (4 பேர்), கொட்டிமத்தளம் (2பேர்), முத்திரைசங்கு (3பேர்), பக்கவாத்தியர் (5 பேர்), காந்தவர் (75 பேர்), திருவாய்க்கேழ்வி (5 பேர்) ஆகியோரும் இருந்தனர். தளிச்சேரிப்பெண்டுகளுக்கும் காந்தவர்விகளுக்கும் நாயகம் செய்ய இருவர் அமர்த்தப்பட்டனர். அவர்கள் தொடர்பாக மேல்கணக்கர் ஒருவரும் கீழ்க்கணக்கு ஏழுபேர்களும் நியமிக்கப்பட்டனர். பதினோரு பேர்கள் கொண்ட உவச்சர்களின் (சகடை கொட்டிகள்) ஆறு குழுக்கள் இருந்தன. இவற்றில் மொத்தம் அறுபத்தாறு பேர்கள் பணிபுரிந்தனர். திருபள்ளித்தொங்கல் பிடிப்பார் (12 பேர்), விளக்குடையார் (8பேர்), நீர்தெளியான் (4 பேர்) சன்னாளியார் (2 பேர்), திருமடைப்பள்ளிக்குசவர் (11 பேர்), வண்ணத்தார்கள் (2 பேர்), காவிதிமை (இருவர்), நாவிசம் (இருவர்), திரு. (கணி), (2+4), கொலினமைசெய்வார் (இருவர்), அம்பட்டன் (ஒருவர்), தய்யான் (2 பேர்), இரத்தினத்தய்யான் (ஒருவன்), கன்னான் (ஒருவன்), தச்சாசார்யம் (5 பேர்கள்), தச்சு (இருவர்), பாணன் (4 பேர்), கண்காணித்தட்டான்மை (இருவர்), பண்டாரிகள் (நால்வர்), ஸ்ரீவிரகர் (170 பேர்), கணக்கர் (6பேர்), கீழ்க்கணக்கர் (12பேர்), நூற்றுப்பதினெட்டு ஊர்களைச் சார்ந்த நூற்றுப்பதினெட்டு மெய்க்காவலர்கள் தஞ்சைக் கோயிலில் பணிபுரிந்தனர்[21] மொத்தத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் முதல் இராசராசன் காலத்தில் தஞ்சைக் கோயிலில் பணிபுரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வழிபாடு

கோயில்களில் நாள்வழிபாடு, திங்கள் வழிபாடு, ஆண்டுவழிபாடு, சிறப்பு வழிபாடு என்று பலவகையான வழிபாடுகள் நடைபெற்றுள்ளன. இவற்றிற்காக அளிக்கப்பட்ட பொருள்களோடு, நிலம், காசு, அவற்றின் மதிப்பு ஆகியவற்றையும் கல்வெட்டுகளில்

காணமுடிகிறது. இறைவனுக்குத் திருமஞ்சனம், திருமெய்ப்பூச்சு, திருமேனியில் அணியும் ஆடை, ஆபரணங்கள் பற்றியும் கல்வெட்டுகள் கூறுகின்றன. இறைவனுக்குப் படைக்கப்பட்ட திருவமுது பிறபடையல் பொருட்கள் பற்றியும் கல்வெட்டுகள் தெளிவான செய்திகளைத் தருகின்றன.

திருமஞ்சனம்

திருமஞ்சனத்திற்காகப் பால், தயிர், நெய், கோமியம், சாணம் ஆகியவை ஐந்தும் கலந்த பஞ்சகவ்யம் எனப்படும் புனிதநீர் பயன்படுத்தப்பட்டது.[22] இரண்டாம் வரகுணனின் திருச்செந்தூர்க் கல்வெட்டு இறைவனுக்குரிய வழிபாட்டு முறையைத் தெரிவிக்கும் பழமையான கல்வெட்டுகளில் ஒன்றாகும்.[23] திருச்செந்தூர்க் கோயிலில் இறைவன் திருமஞ்சனம் ஆடியருளப் பசுவின்பால், பசுவின் தயிர், இளநீர் (வழுவை உட்பட) பயன்படுத்தப்பட்டன. திருமேனியில் பூசியருள மேல்தோல் சிரைத்த பற்று மஞ்சள், சந்தனக்குழம்பு, கற்பூரத்தோடு கட்டி அரைத்த சந்தனம் ஆகியவை அளிக்கப்பட்டன.

ஆடை

இறைவனுக்குரிய ஆடையை நெய்வதற்காகக் கோயிலில் திருமடைவளாகப் பகுதியிலேயே கம்மாளர்களும் அறுவை வாணியர்களும் குடியேற்றப்பட்டனர்.[24] சாதாரண ஆடையிலிருந்து உயர்தர ஆடைகள் வரை நெசவு செய்து கோயிலுக்குத் தரப்பட்டன. இவை ஸ்ரீ உடையாடை எனப்பட்டன. இறைவனுக்கு அளிக்கும் ஆடை தவிர ஒலியல், பாவாடை, மடைப்பள்ளி மேற்கட்டுப் புடவை, கல்புறைப் புடைவை, கற்பக்கிரகத்தில் மேற்புறம் கட்டும் மேற்கட்டி வெண்கூறை, கோயில் பணியாட்களுக்குப் புடைவை ஆகியவை அளிக்கப்பட்டன.[25]

ஆபரணங்கள்

இறைவன், இறைவி ஆகியோர்க்கு அணிவிக்கப்படும் மணிமுடிகள், உடல் முழுவதும் அணிந்துகொள்ளும் ஆபரணங்கள் பற்றியும் விரிவாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. தஞ்சை, திருவாரூர்

போன்ற ஊர்களில் காணப்படும் சோழர் கல்வெட்டுகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

தஞ்சைக் கோயில் கல்வெட்டில் கண்டநாண், புல்லிகை கண்டநாண், பாசமாலை, மாணிக்கத்தின்தாலி, பாகுவலயம், குருவிந்தம், இரத்தின வளையல், திருக்கைக்காறை, இரத்தினகடகம், பவளக்கடகம், திருப்பட்டிகை, முத்தின் உழுத்து, மாணிக்கத்தின் உழுத்து, வயிர உழுத்து, சோனகக்கிடுகு, இரத்தினமோதிரம், நவரத்தினமோதிரம், பிருஷ்டக்கண்டிகை, ஸ்ரீசந்தம், வலத்திருவடிநிலை, இடத்திருவடிநிலை என்று ஐம்பதிற்கு மேற்பட்ட ஆபரணங்களின் பட்டியல் காணப்படுகிறது.[26] திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூர் அம்மனுக்குக் கல்வடம், பாடகம், திருச்சேறை, முகக்காறை, முலைத்தடம், ஆரம், மாங்கல்யம், பட்டனக்காறை, தோடு வளி, பஞ்சரம், ஏகவடம், தாழ்வடம் என்று பதிமூன்று வகையான ஆபரணங்கள் அளிக்கப்பட்டுள்ளன.[27]

திருவமுது

திருவமுது படைப்பதற்கு அளிக்கப்பட்ட உணவு வகைகளோடு அவற்றைச் செய்வதற்காக அளிக்கப்பட்ட பொருட்கள், அவற்றின் செய்முறை பற்றியும் கல்வெட்டுகள் விரிவான செய்திகளைத் தருகின்றன. திருவமுதிற்காகச் செந்நெல்தீட்டல் அரிசி, பத்தெட்டுக்குத்தல் பழவரிசி, பசுவின் நறுநெய், பசுவின் தோய்தயிர், கருவழைப்பழம், வாழைப்பழம், சர்க்கரை, வெற்றிலை, அடைக்காய் ஆகியவை அளிக்கப்பட்டன. சாதத்துடன் வெஞ்சனமாகப் பலவகைக் காய்கறிகள் அளிக்கப்பட்டன. காய்கறிகள் துமிக்கவும், பொரிக்கவும் நறுநெய், காயம் ஆகியவை பயன்படுத்தப்பட்டன. புளிங்கறி, புழுக்குக்கறி, பொரிக்கறி, எற்றிக்கறி என்று நான்கு வகைக் காய்கறிகள் படைக்கப்பட்டன. தயிர்க்கூட்டும் இவற்றோடு சேர்க்கப்பட்டது. சமையலுக்குப் பயன்படும் பல சரக்குகளாக மிளகு, மஞ்சள், சீரகம், சிறுகடுகு, கொத்தம்பரி, எற்றிக்காய், பயிற்றுப்பருப்பு, சிறுபயிற்றுப்பருப்பு,[28] சிறுபயிற்றுப்பொரி, தேங்காய், சுக்கு, உளுந்து[29] ஆகியவை அளிக்கப்பட்டன. திருப்பணியாரத்திற்காகத் தேங்காயும்

கருப்புக்கட்டியும் தரப்பட்டன.[30] பணியாரம் சுவையுடன் செய்வதற்குத் தேங்காய், கதலிப்பழம், சீரகம், மிளகு, சுக்கு, சர்க்கரை, கரும்பு, நெய், பயிறு ஆகியவையும் பயன்படுத்தப்பட்டன.[31]

கும்மாயம் எனப்படும் பயிற்றுப்பொங்கல் பலகோயில்களில் திருவமுதாகப் படைக்கப்பட்டது. இது பயிற்றுப்போனகம் என்றும் அழைக்கப்பட்டது. இதனுடன் சர்க்கரையும் சேர்த்து அக்காரவடிசில் எனப்படும் சர்க்கரைப் பொங்கலைப் படைத்தனர்.[32] விசயநகரவேந்தர் கல்வெட்டுகளில் முக்கிய இனிப்புப் பொருளாக அதிரசம் இடம்பெற்றது.[33] இவற்றுடன் இட்லியும், தோசையும் திருவமுதாகக் கோயில்களில் இடம்பெற்றன.[34] பிட்டு என்ற அளவுகுறைவான இனிப்புப் பலகாரத்தைச் சோழர் காலத்திலிருந்த கல்வெட்டுகளில் காணமுடிகிறது.[35] பூரியும், அப்பமும் இக்காலக்கோயில் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன.[36] கி.பி. 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராசேந்திரன் கல்வெட்டில் அரிசிப்பூரி திருவமுதாக இடம்பெற்றுள்ளது.[37] பிள்ளையாருக்குப் படைக்கப்படும் மோதகமும் கல்வெட்டில் இடம்பிடித்துள்ளது. திருவமுது படைப்பதற்காக வாழை இலைகள் தரப்பட்டன. உணவு உண்ட பின் வெற்றிலை போடுவதற்காக வெற்றிலை, அடைக்காய் (நூறு–நூற்றமுது) சுண்ணாம்பு ஆகியவையும் இறைவனுக்குப் படைக்கப்பட்டன.[38]

நந்தவனங்கள்

ஒவ்வொரு கோயிலுக்கும் வழிபாட்டிற்குரிய பூக்களை அளிப்பதற்கு நந்தவனங்கள் இருந்தன. இவற்றிற்காக அளிக்கப்பட்ட நிலங்கள் நந்தவனப்புறம், பூந்தோட்டப்புறம் என்று அழைக்கப்பட்டன. இவற்றில் பணி செய்யும் ஆட்கள் நந்தவனம் செய்வார், நந்தவனக்குடிகள், நந்தவனம் இறைக்கும் அருந்தவத்தோர் என அழைக்கப்பட்டனர்.[39] நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ என்று பலவகையான மலர்களைக் கோயில் வழிபாட்டிற்கு இவர்கள் கொண்டு வந்து தந்தனர். குவளை, செங்கழுநீர், மல்லிகை, பெருஞ்செண்பகம், சிறுசெண்பகம், இருவாட்சி, தாமரை, அல்லி என்று பலவகையான பூக்களைப்

பூசைக்குப் பயன்படுத்தினர். பூந்தவனங்களிலிருந்து பூக்களைப் பறித்து அவற்றைக் கோயில்களில் கொண்டு வந்து சேர்ப்பதற்குப் பணியாட்கள் இருந்தனர்.[40] கோயிலில் இருந்த பூமண்டபங்களில் அவற்றைத் திருப்பள்ளித்தாமம் என்று அழைக்கப்பட்ட மாலையாகத் தொடுப்பதற்கு ஆண்களும் பெண்களும் இருந்தனர். தேவரடியார் பெண்களும் பூத்தொடுக்கும் பணியில் ஈடுபட்டனர்.[41] திருப்பத்தூர் இரண்டாம் வரகுணபாண்டியன் கல்வெட்டு கோயிலுக்கு அளிக்க வேண்டிய திருப்பள்ளித் தாமத்தின் அளவை, 'இருவிரல் அகலத்து இரண்டிற்கு, நறும்பூ இட்டுத் தொடுத்தன இருமுழ நீளத்தன ஒரோவடமாக நியதி பதினைந்துவடம் இடுவதாக' என்று குறிப்பிடுகிறது.

திருநாட்கள்

நாள்தோறும் கோயில்களில் நடத்தப்பெறும் வழிபாடு தவிர ஒவ்வொரு திங்களிலும் குறிப்பிட்ட நட்சத்திரத்தன்று திருவிழாக்கள் நடைபெற்றன. சித்திரை விஷு, சித்திரை பௌர்ணமி, வைகாசி விசாகத் திருநாள், ஆனிமூலத்திருநாள், ஐப்பசி அசுவினித் திருநாள், ஐப்பசித் திருவோண நாள், கார்த்திகைத் திருநாள், மார்கழித் திருவாதிரை, மார்கழி ஏகாதசி, தைப்பூசத் திருநாள், மாசிமகத் திருநாள், மகாசிவராத்திரி, பங்குனி உத்திரத் திருநாள் என்று பல மாதத் திருநாட்கள் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன.[43] மேலும் திருக்கல்யாணம், பிரதோசம், திருவேட்டைத் திருநாள், தேர்த் திருநாள் என்று பல திருநாட்கள் பற்றிக் கல்வெட்டில் குறிப்புகள் வருகின்றன.[44] இவை தவிர மன்னர்கள், அரச உறவினர்கள், அதிகாரிகள் ஆகியோரது பிறந்த நாட்களில் கோயில்களில் சிறப்பு சந்தி ஏற்படுத்தப்பட்டுத் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டுள்ளன.[45] மன்னர்களின் வெற்றியைக் குறிக்கும் முறையிலும் திருநாட்கள் கொண்டாடப்பட்டுள்ளன.[46]

கோயில் பொருளாதாரம்

இடைக்காலத் தமிழ்நாட்டில் கோயில்கள் படிப்படியே வளர்ந்து தொடக்கத்தில், காசு, கால்நடைகள், பொன், பிறபொருட்கள் என்று

பல கொடைகளைப் பெற்றன. பின்னர் என்றும் மதிப்புக்குறையாத நிலங்களை நிலையான வருமானமாகப் பெற்றன. நிலங்களிலிருந்து வந்த நெல் கோயில் பணியாளர்களுக்கு ஊதியமாக அளிக்கப்பட்டது. கோயில் செலவினங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. கோயிலில் நிலையாகப் பணிபுரிந்தவர்களுக்கு ஊழிய மானியமாக நிலங்கள் கொடுக்கப்பட்டன. கோயிலுக்குத் தானமாக அளிக்கப்பட்ட ஊர், தேவதானம் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டது. சமண, பௌத்த கோயில்களுக்குத் தரப்பட்ட நிலங்கள் பள்ளிச்சந்தம் எனப்பட்டது. பிற்காலத்தில் இசுலாமியர் வழிபாட்டிற்கு அளிக்கப்பட்ட நிலக்கொடையும் பள்ளிச் சந்தம் என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. பெருமாள் கோவிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் திருவிடையாட்டம் எனப்பெயர் பெற்றது. கோயிலுக்கு இறையிலியாக அளிக்கப்பட்ட வெள்ளான்வகை ஊர்கள் நல்லூர் எனப்பட்டன. கி.பி.11, 12, 13 ஆம் நூற்றாண்டுகளில் ஏராளமான நல்லூர்கள் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றன. இது இந்நூற்றாண்டுகளில் கோயில்கள் பெரும் நிலவுடைமை நிறுவனமாக மாறியதைக் காட்டுகிறது.

கோயில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் அவற்றின் பயன்பாட்டிற்குத் தக்க முறையில் பல பின்னொட்டுப் பெயர்களோடு கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. இவை புறம், விருத்தி, யோகம், கட்டளை என்று பலவாறாக அழைக்கப்பட்டன. கல்வெட்டுகளில் அர்ச்சனாபோகம், தேவதான பணிசெய்விருத்தி, வழிபாட்டுப்புறம், ஒழுக்கவிப்புறம், அவிப்புறம், உண்ணாழிகைப்புறம், மெழுகுக்குப்புறம், புதுக்குப்புறம், நந்தவனப்புறம், பூந்தோட்டப்புறம், செங்கழுநீர்ப்புறம், சந்திப்புறம், தட்டளிப்புறம், திருச்செண்டைப்புறம், நெய்ப்புறம் திருவிளக்குநெய்ப்புறம், திருவிழாப்புறம், கற்றளிப்புறம், ஸ்ரீகோயில்புறம், திருப்பணிப்புறம், திருமடைப்பள்ளிப்புறம், அடுக்களைப்புறம், அக்கிரகாரப்புறம், திருப்பாவாடைப்புறம், அவல் அமுதுப்புறம், திருவமுதுப்புறம், திருப்போனகப்புறம், அம்மாவாசைப்புறம், அர்த்தசாமிப்புறம், திருஞானப்புறம், திருமஞ்சனப்புறம் திருமாலைப்புறம், திருப்பள்ளியெழுச்சிப்புறம்,

திருவாய்மொழிப்புறம், உடுக்கைப்புறம் என்று பலவகையான நிலக்கொடைகள் குறிப்பிடப்படுகின்றன.[47]

கோயில்கள் ஏராளமான நிலங்களைப் பெற்று விளங்கியமையால் பலர் கோயில் நிலங்களைக் குத்தகை எடுத்துக்கொண்டு தங்கள் வாழ்வையும் வளப்படுத்திக் கொண்டனர். கோயிலுக்குச் சேரவேண்டிய நெல்லை ஆண்டுதோறும் கொண்டுவந்து கொடுத்தமை பற்றிய செய்திகள் கல்வெட்டுகளில் வருகின்றன. சிலவேளைகளில் வரி செலுத்தாதவர்களின் நிலங்கள் ஏலம் விடப்பட்டு அதன் விலைப்பொருள் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது. கோயில் நிர்வாகத்தினர் அறக்கொடைகள் மூலம் வந்த பொன்னை வட்டிக்கு விட்டு அவற்றின் மூலம் கோயில் காரியங்களைச் செய்தனர். ஊரின் அவசரத் தேவைகளுக்குக் கோயில் நிர்வாகம் உதவி செய்து சமூகத் தொண்டும் புரிந்துள்ளது. இளையான்குடி ஊரார் போசளப் படையெடுப்பின்போது அவர்களுக்கு வேண்டிய பொருளைத் தரமுடியாது தவித்த வேளையில் அவ்வூர்க் கோயில் நிர்வாகமும் உதவியது. கோயில் பண்டாரத்தில் இருந்த ஆபரணங்கள் விற்கப்பட்டு போசளர்களின் தேவை பூர்த்தி செய்யப்பட்டது என்பதை இளையாங்குடி இராசேந்திர சோழீசுவரர் கோயில் கல்வெட்டு உணர்த்துகிறது.[48]

கோயிலும் கலையும்

கோயிலில் நாள்தோறும் மற்றும் திருநாட்களின்போதும் ஆடலும், பாடலும் நடைபெற்றன. சாக்கைக்கூத்து, சாந்திக்கூத்து, தமிழகக் கூத்து, ஆரியக்கூத்து என்று பல்வகையான கூத்துகள் நடத்தப்பெற்றன.[49] பல்லவர்காலத்திலிருந்து கோயில்களில் தேவரடியார், பதியிலார், தளிச்சேரிப்பெண்டுகள் என்று அழைக்கப்பட்ட நாட்டியப்பெண்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். தலைக்கோலிப்பட்டம் பெற்ற திறமை வாய்ந்த ஆடல்மகளிர் அரசன் காணும் வகையில் கோயில் மண்டபங்களில் தங்களது நாட்டியத்தை அரங்கேற்றினர்.[50] இவர்களுக்கு நாட்டியப்பயிற்சி அளிப்பதற்கும் அவர்களது நாட்டியத்தை அரங்கேற்றுவதற்கும்

நட்டுவான்கள் கோயில்களில் இருந்தனர். இவர்களுக்குத் துணையாக உவச்சர்கள், தளிகொட்டுவான், தட்டளிகொட்டிகள் என்று அழைக்கப்பட்ட இசைவாணர்கள் கோயில் பணியில் அமர்த்தப்பட்டனர். இவர்களில் குழல், வீணை, உடுக்கை என்று பலவகை வாத்தியக்கருவிகளை வாசிப்போரும் இடம் பெற்றனர்.

திருவொற்றியூர்க் கோயிலில் இராசராசன் மண்டபத்தில் உறவாக்கின தலைக்கோலி என்பவள் மூன்றாம் இராசராசன் முன்பாக அகமார்க்கப் பாடலைப் பாடினாள். தஞ்சைக் கோயிலில் இராஜராஜேசுவர நாடகம் என்ற நாடகம் சாந்திக் கூத்தன் திருபாலன் திருமுதுகுன்றனால் ஆடிக்காட்டப்பட்டுள்ளது.[51] திருப்பாதிரிப்புலியூர்க் கல்வெட்டில் பூம்புலியூர் நாடகம் குறிப்பிடப்படுகிறது.[52]

சிவன்கோயில்களில் தேவாரப்பாடல்களும் பெருமாள் கோயில்களில் நாலாயிரத்திவ்வியப்பிரபந்தமும் இசையுடன் பாடப்பட்டன. தேவாரப்பாடல்கள் திருப்பதியம் என்ற பெயரில் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. இவற்றைப் பாடுவோர் திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் எனப்பட்டனர்.[53] இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் திருவாமாத்தூர்க் கோயிலில் இப்பணியில் பார்வையற்றவர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் துணையாகப் பணிசெய்ய அமர்த்தப்பட்டவர்கள் கண்காட்டுவார் என்று அழைக்கப்பட்டனர்.[54] திருப்பதியம் பாடுவதற்கென்று அமைந்த இடம் திருக்கைகொட்டி எனப்பட்டது.[55] வைணவர்கள் கோயில்களில் திருவாய்மொழியும், திருப்பாவையும் குறிப்பிடத்தக்க இடம்பெற்றன.[56]

கோயிலும் கல்வியும்

புராணம், இதிகாசம், வேதம், தத்துவம் ஆகியவற்றைப் படித்து விளக்கம் செய்யும் இடமாகக் கோயில்கள் இருந்தன என்பதைப் பல கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. இராமாயணம், பாரதம் படிப்பதற்காக அளிக்கப்பட்ட நிலங்கள் இராமாயணவிருத்தி, பாரதவிருத்தி எனப்பட்டன.[57] முற்காலச்சோழர் கல்வெட்டுகளில்

வேதம் படிப்பதற்காக வேதபிராமணர் அமர்த்தப்பட்டனர் என்ற செய்தி உள்ளது. இதற்காக அளிக்கப்பட்ட நிலக்கொடைகள் வேதவிருத்தி, அத்தியானுவிருத்தி, கிடைவிருத்தி எனப்பட்டன.[58] ஆனைமலை நரசிங்கப்பெருமாள் கோயிலுள்ள முதற்பராந்தகச் சோழனின் கல்வெட்டு வேதம் ஓத ஐந்து பிராமணர்கள் அமர்த்தப்பட்டு அவர்கள் உணவிற்காக நிலமளிக்கப்பட்டதைக் கூறுகிறது.[59] திருக்கோட்டியூர்ச் சிவன் கோயிலில் பிரபாகரம் விளக்கம் செய்ய நிலக்கொடை அளிக்கப்பட்டது.[60] சைவ நெறி நூல்கள் சிவதர்மம், திருஞானம் என்ற பெயரில் சிவன் கோயில்களில் படித்து விளக்கமளிக்கப்பட்டன.

கி.பி.13ஆம் நூற்றாண்டில் பல கோயில்களில் சரஸ்வதிபண்டாரம் என்ற பெயரில் நூலகங்கள் இருந்துள்ளன. ஸ்ரீரங்கம் கோயிலில் இருந்த சரஸ்வதிபண்டாரத்தில் சரஸ்வதி, வேதவியாசர், அயக்கிரீவன் ஆகியோர்க்கும் திருமேனிகள் செய்விக்கப்பட்டு வழிபடப்பட்டன.[61] சேரன்மாதேவியில் துவாராபதியப்பன் கோயிலில் இருந்த சரஸ்வதிபண்டாரத்துக்கு இரண்டு மாநிலம் அளிக்கப்பட்டுள்ளது.[62] பதிமூன்றாம் நூற்றாண்டில் சிதம்பரம் கோயிலில் இருந்த சரஸ்வதி பண்டாரம் குறித்து விரிவான செய்திகளைப் பிற்காலப் பாண்டியரின் கல்வெட்டு ஒன்று தருகிறது.[63] இந்நூலகத்தில் இருந்த புத்தகங்களைப் பார்க்கவும் எழுதவும் அவிழ்த்து வாசித்துக் காட்டவும் திவ்விய ஆகமத்தை வாசிப்பிக்கவும், புராணம், சோதிடம் படிக்கவும் இருபதுக்கு மேற்பட்டவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்நூலகத்தில் கிரந்தத்தில் எழுதப்பட்ட வடமொழி நூல்களோடு தமிழ் ஏடுகளும் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. இச்சரஸ்வதி பண்டாரம் மூன்றாம் குலோத்துங்கசோழனின் குருவான சோமேஸ்வரர் என்ற சுவாமிதேவரால் ஏற்படுத்தப்பட்டது. இவர் எழுதிய புத்தகங்களையும் இவரது சித்தாந்த இரத்தினாகரம் என்ற நூலையும் ஆராய்வதற்குப் பணியாளர் இங்கு நியமிக்கப்பட்டனர். இங்கு முன்பு எழுதி வைக்கப்பட்ட பழமையான ஏடுகளைப் புதியதாகப் படியெடுக்கவும்

புதிய நூல்களை ஏடுகளில் எழுதி வைக்கவும் செல்லரித்துப்போன ஏடுகளைத் திரும்பவும் எழுதவும் பணியாளர்கள் இருந்தனர். மேலும் சிதம்பரம் கோயிலில் இருந்த விக்கிரம சோழன் திருக்கைக் கொட்டியில் வடமொழியிலும் தமிழிலும் இருந்த நூல்களைத் தேசாந்திரிகளுக்கும் வேண்டுவோர்க்கும் எழுதிக் கொடுக்கவும் ஒக்கப்படிக்கவும் பணியாளர் நியமிக்கப்பட்டனர். சிதம்பரம் கோயிலில் சோழர் காலத்தில் ஏற்படுத்திய இந்நூலகத்தைச் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1251–1271) ஆதரவுதந்து அங்கிருந்த புலவர்களுக்கும் பணியாளர்களுக்கும் பல நிலக்கொடைகளை அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. கோயில்களில் பாலபாடக் கல்வியும் கற்றுத் தரப்பட்டது. மேலநெட்டூர்ச் சிவன்கோயில் சிவபிராமணர்களுக்கு ஆகமங்கள் கற்றுக்கொடுக்க ஆகமவிருத்தி என்ற பெயரில் நிலமளிக்கப்பட்டுள்ளது. கோயிலைச் சார்ந்த மடங்களும் ஏராளமான ஏடுகளைச் சேர்த்து வைத்து வடமொழிக் கல்விக்கும் தமிழ்க் கல்விக்கும் ஆதரவளித்துள்ளன.[64]

கோயில் சுற்றாலைகள், மண்டபங்கள் ஆகியவை கல்விக் கூடமாகவும், கல்லூரிகளாகவும் அக்காலத்தில் விளங்கின. கி.பி. 11ஆம் நூற்றாண்டிலிருந்து, கோயில்களில் கல்விச் சாலைகள் இருந்தமை பற்றிக் குறிப்புகள் கிடைக்கின்றன. முதல் இராசேந்திரன் காலத்தில் எண்ணாயிரத்தில் இருந்த கல்லூரியில் 340 மாணவர்கள் படித்தனர். இவர்களில் 270 மாணவர்கள் பொதுக்கல்வியும் 70 மாணவர்கள் சிறப்புக் கல்வியும் பயின்றனர். இவர்களுக்காக 14 ஆசிரியர்கள் இருந்தனர். இங்கிருந்த மாணவர்களுக்கு ரூபாவதார இலக்கணம், வேதங்கள், சூத்திரங்கள், பிரபாகரமீமாமிசை, வேதாந்தம் முதலியவை தொடர்பாக வடமொழிக் கல்வி அளிக்கப்பட்டது.[65] இதுபோன்ற கல்லூரி புதுச்சேரிக்கு அருகிலுள்ள திரிபுவனியில் இருந்தது. இங்கு 240 மாணவர்களும் 12 ஆசிரியர்களும் இருந்தனர். இங்கிருந்த மாணவர்களுக்கு சத்யோஜாத சூத்திரங்கள், மனுசாஸ்திரம், வைகானசசாஸ்திரம், பாரதம், இராமாயணம் ஆகியவையும் கற்பிக்கப்பட்டன.[66]

திருமுக்கூடலில் இருந்த சிறிய வடமொழிக் கல்லூரியில் 40 மாணவர்களும் 4 ஆசிரியர்களும் இருந்தனர்.[67] பாகூரில் இருந்த வடமொழிக் கல்லூரிகளில் 190 மாணவர்களும் 14 ஆசிரியர்களும் இருந்தனர். திருவாவடுதுறையில் இருந்த கல்விக்கூடத்தில் வடமொழிக் கல்வியோடு மருத்துவக் கல்வியும் அளிக்கப்பட்டுள்ளது[68]. திருவொற்றியூரில் இருந்த வியாகரண தியான மண்டபம் வியாகரணப் பள்ளிக்கூடமாக விளங்கியுள்ளது.[69] மேற்கண்ட செய்திகள் சோழர்காலத்தில் வடமொழிக் கல்விக்கு அளித்த சிறப்பை உணர்த்துகின்றன. ஆனால் தமிழ் இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றிற்குக் கல்விச் சாலைகள் கோயில்களில் இருந்ததாக இதுவரை கல்வெட்டுக் குறிப்புகள் கிடைக்கவில்லை.

கோயிலும் சமூகமும்

கோயில் இடைக்காலச் சமூகத்தோடு நெருங்கிய உறவுடைய சமூக மையமாகத் திகழ்ந்தது. முக்கிய சமூக நிகழ்வுகள் கோயிலைச் சார்ந்து நடைபெற்றன. சமூகத்தில் நடைபெற்ற வழக்குகளில் முடிவில் வழங்கப்பட்ட தண்டனைகளில் சில கோயிலுக்குத் திருவிளக்கு எரிக்கும் பரிகாரமாகவே அமைந்தன. சோழர் காலத்தில் எலவானாசூர் என்ற ஊரில் தாய் ஒருத்தி தன்னுடைய குழந்தை ஒன்றின் மீது அரிசினத்தால் எறிந்த அரிமணங்கோல் தவறாக அடுத்தவர் குழந்தைமேல் பட்டுக் காயமுற்றது. இருபது நாட்கள் கழித்து அக்குழந்தை இறந்து போனது. இதனால் எலவானாசூர் கோயிலில் கூடிய நாட்டவையினர் அப்பெண்ணின் செயல் கைப்பிழைபாடெனக் கருதி அவளைக் கோயிலுக்கு ஒரு திருநந்தாவிளக்கு எரித்துவர வேண்டும் என்று கட்டளையிட்டனர். அவளுடைய கணவனைக் கோயில் விமானப் பகுதியில் முப்பத்திரண்டு விளக்குகள் வைக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினர்.[70] கி.பி. பதினோராம் நூற்றாண்டில் ஜம்பை என்ற ஊரில் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்த முடியாத பெண்ணை அதிகாரிகள் துன்புறுத்தினர். அதனால் மனமுடைந்து நஞ்சு குடித்து இறந்துபோன பெண்ணின் பழிதீர கோயிலில்

திருவிளக்கு எரித்தனர்.[71] ஒருவரோடு ஒருவர் போரிட்டு அதில் ஒருவர் இறந்துபோன வழக்குகளின் தன்மை கருதி, கொலையாளிகளுக்குக் கோயிலில் திருவிளக்கு எரித்துவரும் பரிகாரமே தண்டனையாக அக்காலத்தில் தரப்பட்டுள்ளது.

நோயுற்றவரின் துன்பத்தைப் போக்கும் மருத்துவச் சாலைகள் கோயில் வளாகத்தில் இருந்துள்ளன. கோயிலில் விழாக்காலங்களிலும் நாள்தோறும் வெளியூரிலிருந்து வந்த தேசாந்திரிகளுக்கும், பயணிகளுக்கும் உணவு வழங்கப்பட்டது. இது இடைக்காலத்தில் கோயில்கள் சமூகத்தின் அறச்சாலைகளாக விளங்கின என்பதைக் காட்டுகிறது. இச்செய்திகள் தொடர்பாகப் பல கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. மதுராந்தக வட்டம் திருமுக்கூடலில் கோயில் வருவாயிலிருந்து மருத்துவச் சாலை ஒன்றும் நடத்தப் பெற்றிருக்கிறது. இதில் மருந்துகள் அளிக்கும் மருத்துவர், அறுவைச் சிகிச்சை செய்யும் சல்லியக்கிரியை பண்ணுவான், அறுவைத் தொழில் செய்யும் நாவிதர், மருத்துவப் பணிமகளிர், மருந்து கொ[illegible]ளர்பவர் ஆகியோர் இருந்தனர். வீரசோழன் ஆதுலர் சாலை என்று அழைக்கப்பட்ட இம்மருத்துவமனையில் ஓராண்டிற்குத் தேவையான பதினெட்டு வகையான மருந்துகள் இருந்துள்ளதை வீரராசேந்திர சோழனின் கல்வெட்டு தெரிவிக்கிறது.[72] தஞ்சையில் இருந்த சுந்தரசோழவிண்ணகரில் (பெருமாள் கோயில்) இராசராசனின் தமக்கையான குந்தவை நாச்சியார் சுந்தரசோழவிண்ணகர் ஆதுலர் சாலை என்ற பெயரில் ஒரு மருத்துவமனையை ஏற்படுத்தியுள்ளார்.[73] திருப்புகலூர்ச் சாலைகள் இருந்தமை பற்றிக் கல்வெட்டுகள் கூறுகின்றன.[74]

பஞ்சமும் வெள்ளமும் ஏற்பட்ட காலத்தில் கோயில்கள் மக்களுக்கு ஆதரவளித்துள்ளன. இவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் கோயில் பண்டாரத்திலிருந்து கடன் வாங்கி உயிர் பிழைத்துள்ளனர். ஆலங்குடி, எறும்பூர் முதலிய இடங்களிலுள்ள கல்வெட்டுகள் இதனைத் தெரிவிக்கின்றன. ஆலங்குடி மக்கள் கோயில்

பண்டாரத்திலிருந்து 1101 கழஞ்சு பொன்னையும் 464 பலம் வெள்ளிப் பாத்திரங்களையும் கடனாகப் பெற்றுப் பஞ்சத்தைச் சமாளித்தனர்.[75] தேசாந்திரிகளாய் வந்தவர்களுக்கும், இறைவனது அடியவர்களுக்கும், சிவயோகிகளுக்கும், நாள்தோறும் பூசையின் முடிவிலும், திருவிழாக்காலங்களிலும் குறிப்பிட்ட அளவுள்ள உணவு சட்டியில் இட்டு வழங்கப்படும் வழக்கம் தமிழ்நாட்டுக் கோயில்களில் பழங்காலத்தில் இருந்துள்ளது. இதனைச் சட்டிச் சோறு என்று திருவண்ணாமலை, குத்தாலம், ஆத்தூர், பேரூர் போன்ற பல இடங்களில் உள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

முடிவு

இடைக்காலத் தமிழ்நாட்டுச் சமூகத்தின் கருப்பொருளாக, மையமாகக் கோயில்கள் திகழ்ந்துள்ளன என்பதை மேற்கண்ட கல்வெட்டுச் செய்திகள் உணர்த்துகின்றன. அரசன் மற்றும் மக்களின் ஆவணமான கல்வெட்டுகளில் தொண்ணூறு விழுக்காடு கோயில்களிலேயே பொறிக்கப்பட்டுள்ளன. இதனால் அரசியல், சமுதாயம் இரண்டிலும் கோயிலுக்கு இருந்த மதிப்பைப் புரிந்து கொள்ளமுடிகிறது. அரசு ஊரவையோடு இயைந்து கோயிலுக்கு ஆதரவளித்தது. அனைத்துத் தரப்பினரும் சமூகமதிப்பைப் பெற்ற கோயில் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தினர். கோயில் பணிகள் மூலம் தங்கள் ஆளுமையை வெளிப்படுத்தினர். கோயில் கல்வெட்டுகள், கோயில் உருவாக்கம், அமைப்பு, நிர்வாகம், வழிபாடு ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் மக்களின் சமூக பழக்கவழக்கங்கள், நாகரிகம், பண்பாட்டைப் புரிந்து கொள்ளவும் உறுதுணை புரிகின்றன. கோயில்கள் கலைகள் வளர்த்த கலைக்கூடமாகவும், இருப்பிடம், உணவு, மருத்துவம், கல்வி முதலியவற்றைத் தந்த அறச்சாலையாகவும் இருந்தன. இடைக்காலச் சமூகம் கோயிலோடு பிரிக்கமுடியாத உறவுடையதாக விளங்கியது என்பதையும் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

செந்தமிழ்ச் செவ்விலக்கியங்கள் மொழியாக்கம்

பேரா. கா. செல்லப்பன்

உலக நாகரிகங்களில் சில மதங்களை மையமாகக் கொண்டு உருவானவை. சில இனங்களை மையமாகக் கொண்டு உருவானவை. ஒரு சிலவே மொழியை மையமாகக் கொண்டு உருவானவை. தமிழ் நாகரிகமும் அப்படிப்பட்ட ஒரு மொழி முதல் நாகரிகம். ஆங்கில்ஸ் Angels என்ற இனப்பெயரிலிருந்து English என்ற மொழிப் பெயரும் Frank என்ற இனப்பெயரிலிருந்து French என்ற மொழிப்பெயரும் வந்தன. ஆனால் தமிழ் என்ற மொழிப் பெயரிலிருந்துதான் தமிழன் என்ற இனப்பெயரும் தமிழ்நாடு என்ற நாட்டின் பெயரும் வருகின்றன. மனித இனம் முதன்முதலில் பேசிய மொழிகளில் ஒன்று என்பதுவும், இது பன்னெடுங்காலத்துக்கு முன்பே செம்மை பெற்ற மொழியாக, செவ்விலக்கியங்களையும் பெற்ற மொழியாக இருந்தது என்பதுவும் உலகொப்பிய உண்மை. செந்தமிழ் என்ற சொல்லே இதற்குச் சாட்சி. மொழிக்கும், இலக்கியத்துக்கும், வாழ்வுக்கும் இலக்கணமான தொல்காப்பியமும் இக்கருத்துக்கு வலுவூட்டும் சான்றாகும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் இலக்கியத்துக்கு இலக்கணம் எழுந்த மொழியென்றால், அப்போதே இலக்கியங்கள் பண்பட்டுச் செம்மை பெற்றிருந்தன என்பதுதான் பொருள். Classical என்றால் தொன்மையான என்பது மட்டுமல்ல, உயிர்ப்புள்ள, நிலைத்தன்மையுள்ள என்றும் பொருள். செம்மொழிப்பட்டியல் செத்த மொழிகளின் பட்டியல் எனக் கூறி இதனைக் கொச்சைப்படுத்த முயல்பவர்கள், இதனை உணரவேண்டும். சங்க இலக்கியங்களும், திருக்குறளும், சிலம்பும் செவ்விலக்கியங்கள் என்றால் அவை ஒரு பண்பட்ட, முதிர்ச்சியடைந்த இலக்கியப் பாரம்பரியத்தின் வெளிப்பாடு என்று பொருள். ஆனால் அவற்றின் பெருமை காலம் சம்பந்தப்பட்டது மட்டுமன்று; அவை காலத்தைக் கடந்து நிற்கும் ஆற்றலைப் பெற்றிருப்பதாலும் தான். தொன்மையும், உயிர்ப்பாற்றலும், நீண்ட பாரம்பரியமும், இன்றும், இனியும் நிலைத்து நிற்கும் ஆற்றலும் ஒருசேரப் பெற்றதுதான் செவ்விலக்கியம்.

இது கிரேக்க ரோமச் செவ்விலக்கியங்களை விடத் தமிழ் இலக்கியத்திற்குப் பொருந்தும். ஏனென்றால் தமிழ்ச் செவ்விலக்கியங்கள் வெறும் வீரயுகத்தைச் சார்ந்தவை அல்ல. புதுயுகத்தின், இன்றைக்கும் என்றைக்கும் பொருந்தும் மனித விழுமியங்களின் வெளிப்பாடு.

அவற்றின் உயிர்ப்பாற்றலுக்கு இன்னொரு அடையாளம், அவை காலந்தோறும், இட எல்லைகளைத் தாண்டி மொழியாக்கம் செய்யப்படும் தகுதியைப் பெற்றிருப்பதுதான். இலக்கியங்களுக்கு உயிர்ப்பாற்றலும், செம்மாந்த நிலையும் இருந்தால்தான் அவை மொழிபெயர்க்கப்படுகின்றன ("A work of Literature must have vitality and dignity to be translated") என்பர். திருக்குறளின் பெருமைக்கு ஒரு சான்று, அது பல்வேறு மொழிகளில் பல முறை மொழியாக்கம் செய்யப்பட்டிருப்பதுதான். திறமையான புலமையெனில் அதை வெளிநாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும் என்ற பாரதியின் கூற்றுக்கேற்பத் திருக்குறளின் புலமைக்கு உலகப் பேரறிஞர்கள் வணக்கம் செலுத்தியிருக்கிறார்கள். அதைத் தங்கள் மொழிகளில் மொழி பெயர்ப்பதன் மூலம் உலகப் பொது நெறியை வகுக்கிறார்கள். உலகப் பொது உடைமையாகும் திருக்குறள் ஒரு உலகப் பொது உள்ளத்தின் வேட்கையை வெளிப்படுத்துகிறது. ஆனால், அதில் வாழ்க்கையின் ஆயிரம் வண்ணங்களும் அடங்கியிருக்கின்றன. அதன் குறுகிய வடிவினிலே ஒளிந்திருக்கும் கீழ்ப்பிரதிகளை (hidden subtexts) ஒவ்வொரு மொழிபெயர்ப்பாளனும் தனது புரிதலுக்கேற்ப மறுபடைப்புச் செய்கிறான். அப்படிச் செய்யும்போது திருக்குறளின் எல்லையற்ற பொருள் விரிவாக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான். கவிதை அர்த்தத்தைச் சுமந்து கொண்டிருக்கிறது என்பதை விட அர்த்தத்தை தேடித் தவம்செய்கிறது என்பதுதான் உண்மை. ஏனென்றால் அர்த்தம் ஓர் உற்பத்திப் பொருள் அன்று; தொடர் நிகழ்வு (not a product but a process).

திருக்குறளை ஜி.யு. போப் முதலாகப் பல வெளி நாட்டவர்கள் சிறப்பாக மொழிபெயர்த்துள்ளார்கள். ஆனாலும் திருக்குறளின் உண்மையான முழுமையான பரிணாமத்தைத் தமிழர்களே இன்னும் புரிந்துகொள்ளவில்லை. தொடுவானம் போல் திருக்குறள் தொடர்ந்து விரிவடைந்து கொண்டுதான் வருகிறது. பண்பாட்டுச் சிக்கல்,

மொழியியல் சிக்கல், நடையியல் சிக்கல் எனப் பலவற்றை எல்லா மொழி பெயர்ப்பாளர்களும் சந்தித்திருக்கிறார்கள். பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார் இறைவனடி சேராதார் என்ற குறள் "none can swim the great sea of birth but those who are united to the feet of god" என்று ஜி.யு. போப்பும் "who then can swim the wide earthly sea? Not they who cling not to our Lord's feet" என்று போப்லியும் மொழி பெயர்க்கின்றனர். பிறவிப் பெருங்கடலை போப்தான் சரியாக மாற்றம் செய்திருப்பது போலிருக்கிறது. ஆனால் நீந்தார் இறைவனடி சேராதாரில் உள்ள எதிர்மறைப் பண்பைப் போப்லியின் மொழியாக்கத்தில் தான் பார்க்கமுடிகிறது. ஆனால் இருவருமே இதன் ஆக்கப்பூர்வத் தொடக்கத்தை (பிறவிப் பெருங்கடல் நீந்துவர்) மறந்துவிட்டனர். மூலத்தின் முன்பகுதியில் எழுவாய் ஒளிந்திருக்கிறது.

எனவே இதை ஆங்கிலத்தில் Passive அமைப்பில் உருவாக்குவது தான் பொருந்தும். 'The ocean of birth can be traversed but not by those who have not reached the feet of god'. இப்படி எத்தனையோ உள்ளன. ஒழுக்கம், குடிமை இவற்றிற்கெல்லாம் ஈடான சொற்களை இன்னும் நாம் காணவில்லை. ஆனால் மொழியாக்கத்தில் இழப்பு மாத்திரம் இல்லை. அர்த்த வளர்ச்சியும் உண்டு. ஒரு மூலத்தின் பின்வாழ்வான (After Life) மொழியாக்கத்தின் வழி, மூலத்திற்கும் மூலமான மூலமொழியொன்றை, அதன் அர்த்தப் பான்மையினை ஓரளவும உணர்ந்துகொள்ள முடியும். ப்ளாஞ்சட் என்பவரின் கருத்துப்படி, 'A work has the maturity and dignity to be translated only if it harbours the difference somehow made renderable'. சங்க இலக்கியங்களை மொழியாக்கம் செய்பவர்கள் இத்தகைய சங்கடங்களை, சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. சங்கப் பாடலின் எளிமை, குறுகிய வடிவம், செறிவான, ஆனால் இயல்பான உவமைகள் இவற்றை, வேறுபட்ட வாழ்க்கை முறைகளைப் பேசும் மொழிகளில் எப்படிக் கொண்டுவருவது ?

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவினை வணிகன் ஆய் அலன், பிறரும் சான்றோர் சென்ற நெறியென ஆங்குப்பட்டன்று அவன் கைவண்மையே என்ற ஆய்அண்டிரன் பற்றிய புறநானூற்றுப் பாடலை மொழிபெயர்க்க முயலும்போது மலைத்துப் போனேன். குறிப்பாக முதல் இரண்டு வரிகளையும், 'Aai is not a

tradesman in morality who invests here and now in order to benefit in the hereafter' என்ற என் மொழியாக்கம் எனக்கு இன்னும் நிறைவுதரவில்லை.

அகப்பாடல்களை மொழியாக்கம் செய்யும்போது உள்ளுறை, இறைச்சி போன்ற தமிழ்க் கவிதைப் பண்புகளால் சிக்கல் மேலும் கூடுகிறது. எடுத்துக்காட்டாக, 'கருங்கால் வேங்கை வீயுகு துறுகல் இரும்புலிக் குருளையின் தோற்றம், காட்டிடை, எல்லி வருநர் களவிற்கு நல்லை அல்லை நெடுவெண்நிலவே' என்ற குறுந்தொகைப் பாடலில் வரும் களவை 'as he comes stealing through the night in the forest' என்று A.K. ராமானுஜமும் where he comes at night to do what should not என்று G.L. ஹார்ட்டும் மொழிபெயர்க்கின்றனர். இரு சிறந்த மொழிபெயர்ப்பாளர்களும் களவின் தொனியைச் சரியாகக் காட்டவில்லை. அதைவிட, வேங்கைப்பூ எப்படித் திருமணத்தை நினைவுபடுத்துகிறது என்பதும் மொழியாக்கத்தில் வரவில்லை.

எது மொழியாக்கத்தில் இழக்கப்படுகிறதோ அதுதான் கவிதை என்பார் அமெரிக்கக் கவிஞர் ப்ராஸ்ட். ஆனால் நல்ல மொழியாக்கம் ஓரளவு மூலத்தின் உணர்வை மாற்றுவடிவில் தரமுடியும். இறுதியாக, யாயும் ஞாயும் என்ற பாடலை மொழியாக்கம் செய்ய முயல்வோம்.

"யாயும் ஞாயும் யாராகியரோ,
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி யறிதும்?
செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"

என்ற இப்பாடலின் ஆங்கில மொழியாக்கம் உலகத்தில் மிகச்சிறந்த பாடல்களில் ஒன்றாக லண்டன் சுரங்கப்பாதையில் பொறிக்கப்பட்டுள்ளது. இப்பாடல் இரண்டு உள்ளங்கள் இணைதலை, மிக எளிமையான அடிப்படை உறவுச் சொற்கள் மூலம் முதலில் உணர்த்துகிற யாய், ஞாய், எந்தை நுந்தையில் உள்ள எதுகை இறுதிவரை வருகிறது. அது வேற்றுமையில் ஒற்றுமையை உணர்த்துவதாக உள்ளது. மேலும் இரண்டு உள்ளங்களும் எந்தத் துணையுமின்றி வெறும் யானும் நீயுமாக இணைந்தது அடைமொழிகளில் காட்டப்பட்டுள்ளது. இறுதியில் இந்த இயற்கையான மனித சங்கமம் இயற்கைச் சங்கமத்தால்

விளக்கப்பட்டது. இதை ஏ.கே. இராமனுஜம் போன்றோர் ஓரளவு மொழிபெயர்ப்பால் காட்டியுள்ளனர். ஆனால் இறுதி உவமையால் உள்ளம் ஒன்றிய தன்மையை மொழியாக்கம் கொணர முடியவில்லை என்று சொல்லும்போது மூலத்தின் முழுமை, இரண்டும் இரண்டறக் கலந்த தன்மையைக் காணமுடியவில்லை. உலக இலக்கியங்களிலே ஒரு சிறிய உவமையால், தன் நாமம் கெட்டு அந்த உவமையையே பெயராகப் பெற்று இவ்வளவு காலம் வாழும் ஒரே கவிஞர் செம்புலப் பெயல்நீரார்தான். அந்த உவமையின் முழுமையான கவித்தன்மையைப் பெயர்ப்பது இன்னும் இயலவில்லை.

இந்த உவமையே, மொழியாக்கத்தில் பண்பையும் சுட்டுவதாக உள்ளது. எங்கோ பிறந்த இருவர் காதலால் இணைவதுபோல், வான் மழையும் மண்ணும் இயற்கையின் இயக்கத்தால் இரண்டறக் கலப்பதுபோல் எங்கெங்கோ எழுதப்பட்ட கவிதை இன்னொரு மண்ணில் மொழியில் இணைகின்ற விந்தையும் நிகழ்கிறது. இம்முயற்சி வெற்றி பெற இரு மொழியாளரும் இணைந்து பணியாற்றவேண்டும். அப்போது இரண்டு மொழிகளும் இணைந்த ஒரு மூன்றாம் மொழி உருவாவதாகக் கூறுகிறார்கள்.

மொழியாக்கம் செய்யும்போது மூலமும், புதிய பரிமாணம் பெறுகிறது. இந்தப் பரிமாண விரிவாக்கத்தைத் தமிழர்கள் மட்டும் தனித்துச் செய்ய முடியாது. உலகோடு இணைந்து செய்ய ஒரு உயர்நிலை மொழியாக்க மையம் நிறுவப்பட வேண்டும். யுனெஸ்கோ போன்ற அமைப்புகளின் அங்கீகாரமும் உதவியும் நாடப்பட வேண்டும். முதல் நிலையில் திருக்குறள், சங்க இலக்கியம், சிலம்பு போன்ற இலக்கியங்களின் பல்வேறு மொழியாக்கங்களின் ஒப்பீட்டுப் பதிப்புகளை (Variorum editions) வெளிக்கொணர வேண்டும். "தாயெழிற்றமிழை என்றன் தமிழரின் கவிதை தன்னை, ஆயிரம் மொழியிற்காண இப்புவி அவாவிற்றென்றதோயுறும் மதுவின் ஆறு தொடர்ந்தென்றன் செவியில் வந்து பாயு நாள் எந்நாளோ? ஆரிதைப் பகர்வார் இங்கே?" எனப் பாவேந்தர் ஏக்கத்தோடும் எக்காளத்தோடும் கேட்டார். எத்தனை பெரிய ஆசை, அவருக்கு! அந்தப் பொய் சொல்லாப் புரட்சிக் கவிஞனின் கூற்றை நனவாக்கும் நாள் விரைவில் வரும் என நம்புவோமாக...

செப்பரும் பெரும்புலமைச் செந்தமிழ் ஆசான்

பேராசிரியர் கு. வெ. பாலசுப்பிரமணியன்

செந்தமிழின் முதற்பத்திராதிபராக அமர்ந்து, தம்புலமையானும் அயரா உழைப்பாலும் தமிழின் சீருயரச் செய்தக்கன செய்த பெரும்புலமைப் பேராசான் பெரிய இராகவனார் எனப் பெயர்பெற்ற ரா. ராகவய்யங்கார் 1870 முதல் 1948 முடிய எழுபத்தெட்டாண்டுகள் வாழ்ந்த புகழ்மறையாப் பொற்புடையவர். ஆங்கிலக் கல்வியின் பரவலால் அருந்தமிழ்க் கல்வியும் புலமையும் மங்கியிருந்த காலத்தில், தண்டமிழ்க் கூடற் கோநகரிலேயே திருக்குறள் நூல் கிடைக்கவில்லை என்ற நிலை தோன்றிற்று. சங்கமிருந்து தமிழாய்ந்த திருநகரில் திருக்குறள் நூல் ஒன்றில்லை காண் என்பதறிந்து உளந்துடித்த பாண்டித்துரைக் கோமகனார் 1901 ஆம் ஆண்டில் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தனர். 1902ஆம் ஆண்டில் சங்கத்தின் சார்பில் திங்களிதழாகச் செந்தமிழ் தொடங்கப் பெற்றது. இவ்விதழின் ஆசானாக இரண்டரையாண்டுகள் ஈடில் பெரும்பணி ஆற்றினார் இராகவனார்.

பேரவைப் பெரும்புலவர்

சேதுசமத்தானப் பெரும்புலவர் என்ற இருக்கைக்கண் அமர்ந்து அரசப் பேரவைக்கு அணி செய்த பெருமகனார் இராகவய்யங்கார். 'பொப்பண்ண காங்கேயன் அளித்த சோற்றுச் செருக்கல்லவோ தமிழ் மூன்றுரை செய்வித்ததே' என்று அடியார்க்கு நல்லார் கூறுவது போன்று இராகவனாரும் சேதுவேந்தர்களின் புரப்பே தம்மைப் புலவராக்கியது எனக் கூறுகின்றார்.

> **"இன்பாற் கரனார் இராசரா சேச்சுரச்சேய்**
> **தென்னாக நாறவரு சேதுபதி—மன்னரிவர்**
> **வீறுமே வன்ன மிசையாதேல் என்நாவே**
> **கூறுமே பாரி கொடை"**

என, ஒட்டக்கூத்தர் வேந்தர்மூவர் அவை வீற்றிருந்து தமிழ்செய்ததுபோல் இப்பெருமகனாரும் சேதுவேந்தர் மூவர் அவையினும் தலைமைப்புலவராக இருந்து அவர்களால் புரக்கப் பெற்றமை கூறுவர்.

பாஸ்கர சேதுபதியின் காலத்தில் அவைக்களப் புலவராகப் பணியமர்த்தப் பெற்ற இராகவனார், சேதுமன்னர் விவேகானந்தப் பெருமகனாரைச் சிகாகோவிற்கு அனுப்பி, அவர் சிகாகோவிலிருந்து திரும்பியபோது (20.1.1897) அளித்த பெரிய வரவேற்பு விழாவில் உடனிருந்தனர். அப்போது விவேகானந்தரோடு சமயத் தொடர்பாகக் கலந்துரையாடி அவரை மகிழ்வித்தனர். இப்பெருமகனாரைத் தம் அவைக்களப் புலவராக ஆக்கிய பாஸ்கரர் அவர்க்கு ஊதியம் வழங்கவென ஓர் ஆவணம் எழுதி 4–11–1901 ஆம் நாளன்று அளித்தனர். அந்த ஆவணம் (மன்னர் பாஸ்கர சேதுபதி, டாக்டர் எஸ்.எம்.கமால்) இராகவனாரின் அருமை பெருமைகளை உரிய வகையில் விவரிக்கின்றது.

"............ நமது சேது சமஸ்தானத்துத் தலைமைத் தமிழ் வித்துவானாய் உள்ள தாங்கள் தமிழ் நூலுரைகள் முதலியன செய்கின்றதனாலும், தமிழிலுள்ள அரிய பெரிய விஷயங்களைப் பலர்க்கும் உபந்யசித்தலாலும், அனேகர்க்குப் பூர்விகத் தமிழ் பாஷையைப் போதித்து வருதலானும், வெளியிடுதலானும், இன்னும் பல நன் முயற்சிகளானும், தமிழ் பாஷையை நன்றாய் வளர்ப்பவர்களாயும், நமது சமஸ்தானத்துச் செந்தமிழ் பரீக்ஷாதிகாரத் தலைவராயும், நமது சமஸ்தான வித்வத் அங்கத்தில் பரம முக்கியராயும் இருத்தலையாலோசித்து,....."

'திராவிய சகாயம்' கொடுக்க வேண்டுமென்று உணர்ந்து ஆண்டொன்றுக்கு ரூ.600 ஊதியமும் பல்லக்குக் கட்டணம் 35 ரூபாயும் சேர்த்து ரூ.635ஐ இராகவய்யங்கார் ஆயுட்காலம் முழுமைக்கும் கொடுக்க ஏற்பாடு செய்தனர். இவ்வாவணத்தை இராகவர்க்கு வழங்கி அவரைப் பல்லக்கில் ஏற்றித் தாமும் சுமந்தார் பாஸ்கர சேதுபதி. இத்தமிழுள்ளச் சால்பினை இராகவர்,

"**குவிகை தாங்கிக் குறையி ரந்தார்முனம்**
கொண்ட லெனப்பொழி தருபாஸ்கரன்
சிவிகை தாங்கிட ஏறிய வீறுடைச்
சேது காவலர் தங்கவி யாகினேன்"

என்று போற்றுகின்றார். தம்மைப் புரந்த பாஸ்கர வள்ளல் மறைந்தமை கண்டு நெஞ்சம் உருகிக் கண்பனித்துக் கையறு நிலையில் இராகவர் கலங்கினார்.

*"பாட்டும் உரையும் உயிலாப் பதடிகள்தம்
ஓட்டைச் செவியுள் உகுப்பேனோ - நீட்டுகொடைச்
செங்கையாய் பாற்கரனே செந்தமிழ்ப்பா வின்சுவையை
எங்கையா சொல்வேன் இனி"*

என்று அக்கொடை ஞாயிறு மறைந்தபோது பாடினர்.

செந்தமிழ்ப்பணி

ரா. இராகவையங்கார் செந்தமிழின் ஆசிரியராய்ப் பணியாற்றிய இரண்டரை ஆண்டுக் காலத்தில், தாமே பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் செந்தமிழில் எழுதியதோடன்றி அறிஞர் பலரின் கட்டுரைகளையும் பெற்றுச் செந்தமிழில் வெளியிட்டார். அவ்வாறு கட்டுரைகள் அளித்த அறிஞர்களுள் பரிதிமாற்கலைஞர், சோழவந்தான் அரசஞ் சண்முகனார், கனகசபைப்பிள்ளை, யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் குமாரசாமிப்பிள்ளை, மறைமலை அடிகளார், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், மு. இராகவய்யங்கார், குலாம் காதிறு நாவலர், வெ.ப. சுப்பிரமணிய முதலியார், பாண்டித்துரைத் தேவர், திருமணம் செல்வக் கேசவராய முதலியார், நாராயணையங்கார், உ.வே. சாமிநாதையர், கோபிநாதராவ், அ. மாதவையர், சடகோபராமானுசாச்சாரியார், ஆபிரகாம் பண்டிதர், சதாசிவ பண்டாரத்தார், வேங்கடசாமி நாட்டார், வை.மு.கோபால கிருஷ்ணமாசாரியர், வையாபுரிப் பிள்ளை, விபுலானந்தர், சோமசுந்தர பாரதி, பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரி என்போர் ரா. இராகவய்யங்கார் காலத்திலும் அவர்க்குப் பின்னும் எழுதியோராவர்.

இராகவய்யங்கார் செந்தமிழில் எழுதிய கட்டுரைகளிற் பல புதிய ஆய்வு முடிவுகளை அறிஞருலகிற்குக் காட்டின. சி.வை. தாமோதரம் பிள்ளை அச்சிட்டு வெளியிட்ட தொல்காப்பிய உவமவியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல், மரபியல் நான்கும் அதுகாறும் நச்சினார்க்கினியரின் உரையின என்றே கருதப் பெற்றன. அவை பேராசிரியரின் உரையென்று ஆய்ந்து நிறுவியவர் இராகவய்யங்காரேயாவர். கம்பராமாயணத்திற்குக் கம்பர் சூட்டிய பெயர் இராமாவதாரம் என்ற செய்தியும் அவரால் புலப்படுத்தப்பட்டதாகும். பாகவத புராண ஆசிரியர் வேம்பத்தூர்ச் செவ்வைச் சூடுவார் என்பதையும் ஐயங்காரே வெளிக்காட்டினார். சங்கப் புலவர் பலர் குறித்த

ஆய்வுக் கட்டுரைகளும், கம்பர் திருவள்ளுவர் குறித்த ஒப்பீட்டாய்வும், பெண்பாற் புலவர் பலர் குறித்த வரலாறும், சேதுவேந்தர்களின் வரலாறும் வழிமுறையும் இப்பெருமகனாராற் செந்தமிழில் வெளிவந்தன.

செந்தமிழ் இதழ், தமிழாராய்ச்சி உலகில் பெரிதும் போற்றப்பெற்றது. இதனைத் தொடர்ந்தே பல ஆராய்ச்சி இதழ்கள் தமிழுலகில் தோன்றின. மதுரைத் தமிழ்ச் சங்கத் தோற்றம், செந்தமிழ் இதழ் பிறப்பு ஆகியவற்றைக் கண்டே 1909 இல் கரந்தைத் தமிழ்ச் சங்கமும் அதனைத் தொடர்ந்து அச்சங்க இதழான தமிழ்ப் பொழிலும் தோற்றுவிக்கப் பெற்றன. ஒரு நூற்றாண்டுக்காலத் தமிழாராய்ச்சியில் செந்தமிழின் பணி விழுமியது.

இரண்டாங் கபிலர்

இராகவய்யங்கார் சுவைமிகச் செய்யுளியற்றும் புலவருமாவர். இவருடைய செய்யுட்களில், கற்பனைச் செழுமையும் உணர்ச்சியின் வெளிப்பாடும் மிகுதியும் தோன்றும். சென்னையில் தமிழ், வடமொழி அறிஞர் பலர் கூடி இவர்க்குப் பாஷா கவி சேகரர் என்ற சிறப்புப் பெயர் தந்து மகிழ்ந்தனர். இவர் ஆறு செய்யுள் நூல்களைப் படைத்தவர். இராசராசேசுவர சேதுபதியின் மீது நாணிக்கண் புதைத்தல் என்னும் ஒரு துறை பற்றி நானூறு பாடல்களைக் கார்முகிலெனப் பொழிந்த பாமுகிலிவர்.

இப்பெரும் புலவர் இயற்றிய 'பாரி காதை' வள்ளல்பாரியின் கொடை மடத்தைப் போற்றுவது. இப்பெருநூலுக்கு இவரே உரையும் வரைந்தனர். 14–2–1934 ஆம் நாளன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இந்நூல் அரங்கேற்றப் பெற்றது. அண்ணாமலை அரசர் பிறந்த நாளில் அவர் மகனார் முத்தையவேள் இந்நூலை அரங்கேற்றச் செய்தார். நாவலர் சோமசுந்தர பாரதியார் விழாவைத் தொடங்கி வைக்க, உ.வே. சாமிநாதையர் தலைமை தாங்க மு. இராகவய்யங்கார் பாரி காதைச் செய்யுட்களைப் படிக்க, உரை நயம் கூறத் தமிழகத் தலைமைப் புலவர் பலர் அமர்ந்தினிது கேட்டு நூலாசிரியரைப் போற்றினர். அரசர் முத்தையவேள் இந்நூற்கு ஆயிரம் வெண்பொற் காசளித்துச் சிறப்பித்தார். 753 வெண்பாக்களால் இயன்ற இக்காதை ஒன்பான் சுவையும் தன்பாற் சேர அமைந்தது. பாரிவேள்

முல்லைக்குத் தேரீந்தபின் நடந்துவரல் கண்ட மக்கள் உள்ளங்கசிந்து அக்கொடை மடச் செயலைப் போற்றினாராம்.

> "குடிவருத்தம் என்னாகக் கொள்ளுமோ என்றார்
> கொடிவருத்தம் காண்கிலாக் கோவேள் - படியின்
> அடிவைத்த நன்கூவடாய் வார் கண்டார் ஒன்னார்
> முடிவைத்த தாளானை முன்"

என்று பாரியின் கொடைப்பண்பு காட்டுவர். பாரி இறந்தபின் கபிலர் பாரிமகளிரை உரியவர்பால் அடைக்கலப் படுத்தித் தீப்பாய்ந்து உயிர்ப்பலி ஈந்தனர். இறக்குமுன் கபிலர்,

> "உன்னைப் பிரிந்தும் உயிர் போகா என்னுடலம்
> தன்னைத் தழல் வீழ்த்தல் தக்கதே - நின்னைப்
> பிரிந்துள்ளே மூளும் பெருநெருப்புக் கீண்டு
> விரிந்த தழல் குளிர்தல் மெய்"

என்றனரென்பர். பாரிகாதையை அரங்கேற்றிய பின் இராகவய்யங்கார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராய்ப் பணியமர்த்தப் பெற்றார். 1935 ஆம் ஆண்டிலிருந்து 1941 ஆம் ஆண்டு முடிய ஆறாண்டுகள் ஐயங்கார் பல்கலைக்கழகத்தில் அரிய ஆய்வுகளை நிகழ்த்தியதோடு முதுகலை மாணவர்களுக்குப் பாடமும் கூறினர். பல பைந்தமிழ் ஏடுகளை ஆராய்ந்தும் உரைவரைந்தும் பயன்மிகு பணியாற்றினர். அக்காலத்தில் அவர் குறுந்தொகையின் நூற்றுப்பதினொரு பாடல்களுக்கு எழுதிய உரை 1946இல் வெளிவந்தது. பின்பு அவரெழுதிய நூல் முழுமைக்குமான உரை கிடைக்கப் பெற்றுப் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிடப்பெற்றது.

மகாவித்துவான் ஐயங்காரவர்கள் குறுந்தொகை, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய சங்க நூல்களுக்கும், கீழ்க்கணக்கில் நான்கு நூல்களுக்கும் உரை வரைந்து பதிப்பித்தனர். நேமிநாதம், பன்னிருபாட்டியல், தொல்காப்பியம் பொருளதிகார நச்சினார்க்கினியருரை ஆகிய இலக்கண நூல்களையும் ஐயங்கார்

பதிப்பித்தார். பகவத்கீதை, சாகுந்தலம் எனுமிரு வடமொழி நூல்களை இப்பெருமகனார் தமிழில் மொழிபெயர்த்தார்.

ஐயங்காரின் தமிழ்ப் புலமை பல தனித்திறன்களைக் கொண்டது. இதழாசிரியர், இலக்கியப் படைப்பாளர், இலக்கண ஆசிரியர், சுவடி ஆய்வாளர், நூற்பதிப்பாசிரியர், உரையாசிரியர், ஒப்பீட்டாய்வுரைஞர், மொழிபெயர்ப்பாளர் எனப் பல நிலைகளில் அவர் புலமைப் பணி வெளிப்பட்டது.

"துதிபெறு தமிழில் வடமொழிப் பரப்பில்
தோய்ந்துநுண் பொருள் பல ஆய்ந்து
விதிமுறைஅவையோர் வியக்குமோ நுவலும்
விறன்மிகு நாவனம் படைத்தோன்
பொதிபொருட் சுவையின் வீறுகொள் பாடல்
பொருளுரை ஆய்வுரை பலவும்
மதிவலி இயற்றும் பெருமைசால் புலமை
வாய்ந்தவன் இராகவ மாலே"

என்று பண்டிதமணி கதிரேசனார் ஐயங்காரின் புலமைத் திறம் போற்றுவர். பெரிய இராகவனாரின் உடனிருந்து துணைபுரிந்த அவர்தம் உறவினர் சின்ன இராகவனார் எனும் மு. இராகவய்யங்கார், பெரியவர் மறைந்தமை குறித்துக் கையற்று,

"கம்பன் பிறப்போ கபிலரவ தாரமோ
இம்பரிவ ரென்ன இருந்தான் இறந்தானே
செம்பதுமை ஈன்றருளும் சீரா கவனோடும்
அம்புவியிற் காண்டற் கரும்புலமை மாய்ந்ததுவே"

எனப் பாடினார். இப்பெரியார் தம் இதழ்ப்பணியும் ஆராய்ச்சிப் பெருந்திறமும் இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் சென்றாலும் மறையா என்பது மறுக்கவியலா உண்மையாகும்.

செந்தமிழ்க் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம்

10-நாள் சிறப்பு முகாம்

செந்தமிழ்க் கல்லூரி நாட்டு நலப் பணித்திட்டம் 10 நாள் சிறப்பு முகாம் 15.02.2008 முதல் 24.02.2008 வரை கொடிமங்கலத்தில் சிறப்பாக நடைபெற்றது. இம்முகாமில் 145 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். முதல் நாள் கல்லூரிச் செயலாளர் திருமிகு. இரா.குருசாமி அவர்கள் தலைமை ஏற்க, தமிழ்ச் சங்கச் செயலாளர் திருமிகு. இரா.அழகுமலை அவர்களும், கல்லூரி முன்னாள் மாணவரும், ஊராட்சி மன்றத் தலைவருமாகிய திருமிகு. வெ. பாலமுருகன் அவர்களும் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் க. சின்னப்பா முகாமைத் தொடங்கி வாழ்த்துரை வழங்கினர். இம்முகாமில் மாணவர்கள் காலை நேரங்களில் திருக்கோயில் உழவாரப் பணியையும், சாலைகளைச் செப்பனிடும் பணியையும் சிறப்பாகச் செய்தனர். மாலையில் பட்டிமன்றமும், வழக்காடு மன்றமும், கவியரங்கமும், மாணவரின் கலை நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றன. இலவச ஒருநாள் பொது மருத்துவ மற்றும் கண்சிகிச்சை முகாம் நடைபெற்றது. இம்முகாமிற்கு அவ்வூர்ப் பெரியோர்களும், தாய்மார்களும் மிகுந்த ஆர்வமுடன் உதவி புரிந்தனர். திட்ட அலுவலர்கள் முனைவர். சு. விஜயன், முனைவர் மு. மீனா, திருமதி. ஹேமலதா மூவரும் முகாம் சிறப்புப் பெற உதவி புரிந்தனர்.

தொடர்பு முகவரி :

ஆசிரியர், செந்தமிழ்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை-625001.

தொலைபேசி : 0452-6575615

RNI Regd. No.: 5508 April 2008

ஆசிரியர் குழு

முனைவர் திரு. சுப. அண்ணாமலை
முனைவர் திரு. தமிழண்ணல்
பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்
டாக்டர் திரு. ந. சேதுராமன்
முனைவர் திரு. ம.ரா.போ. குருசாமி
முனைவர் திரு. அ.அ.மணவாளன்
முனைவர் கதிர் மகாதேவன்
முனைவர் நா. பாலுசாமி
முனைவர் பெ. சுயம்பு
முனைவர் திரு. அ. தட்சிணாமூர்த்தி
இராசா திரு. முருகதாஸ் தீர்த்தபதி
முனைவர் திரு. செ. கந்தசாமி
முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,